பேரழிவின் விளிம்பில் உலகம் தள்ளாடுகிறது!
பக்கம் 3

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-11)
பக்கம் 11

திருக்குர்ஆனின் வசனங்கள் நீக்கப்பட்டுள்ளனவா?
பக்கம் 16

மார்க்க அறிவுப் புத்தகம் (தொடர்-1)
- - சிறுவர் பகுதி - -
பக்கம் 20



மாத இதழ்


# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | November 2022 | Issue No. 12



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340



# திருக்குர்ஆன்

فَارۡتَقِبۡ يَوۡمَ تَاۡتِى السَّمَآءُ بِدُخَانٍ مُّبِيۡنٍۙ

எனவே தெளிவான புகை ஒன்றை வானம் கொண்டு வரும் நாளை நீர் எதிர்பார்ப்பீராக.

يَّغۡشَى النَّاسَ‌ ؕ هٰذَا عَذَابٌ اَلِيۡمٌ

அது மக்கள் எல்லாரையும் சூழ்ந்து விடும். இது வேதனை அளிக்கக்கூடிய தண்டனையாகும்.

رَبَّنَا اكۡشِفۡ عَنَّا الۡعَذَابَ اِنَّا مُؤۡمِنُوۡنَ

(மக்கள் அதனைக் கண்டு கதறுவர்.) எங்கள் இறைவா! இத்தண்டனையை எங்களை விட்டு அகற்றி விடுவாயாக! நிச்சயமாக நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம். (44:11–13)



# ஹதீஸ்

أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ، قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَقُولُ " إِذَا أَرَادَ اللَّهُ بِقَوْمٍ عَذَابًا أَصَابَ الْعَذَابُ مَنْ كَانَ فِيهِمْ ثُمَّ بُعِثُوا عَلَى أَعْمَالِهِمْ " .

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“அல்லாஹ் ஒரு சமூகத்திற்கு வேதனை தர நாடினால் அவர்களில் ஒவ்வொருவரையும் அந்த வேதனை பிடித்துக் கொள்கிறது. பின்னர் அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்குத் தக்கவாறு உயிர்த்தெழுப்பப்படுகிறார்கள்.”

(சஹீஹ் முஸ்லிம் எண்.2879)

# “பேரழிவின் விளிம்பில் உலகம் தள்ளாடுகிறது!”

## USA -ன் ஆலன், டெக்ஸாஸ் நகரில், பைத்துல் இக்ராம் பள்ளிவாயில் திறப்பு விழாவின்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்ச்சியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் உரை




**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தின் ஆலன் நகரில் அஹ்மதிய்யா ஜமாஅத்தால் புதிதாகக் கட்டப்பட்ட பைத்துல் இக்ரம் பள்ளிவாயிலை 07.10.2022 அன்று நிகழ்த்திய தமது ஜுமுஆ உரை மூலம் திறந்து வைத்தார்கள். பின்னர் அதையொட்டி 09.10.2022 அன்று ஒரு வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியில் மாற்று மார்க்கத்தைச் சேர்ந்த விருந்தினர்களும், ஒன்றிய, மாநில, மாவட்ட மற்றும் நகர அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பிஸ்மில்லாஹ் ஓதியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தமது உரையைத் துவக்கினார்கள். பள்ளிவாயில் கட்டுவதற்கு அருள் செய்த இறைவனுக்கு நன்றி கூறினார்கள். மேலும் ஜமாஅத்தின் அழைப்பினை ஏற்று வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கும் பள்ளிவாயில் திட்டத்தில் ஏதாவது ஒரு வகையில் உதவி செய்த அனைவருக்கும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

பின்னர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பள்ளிவாயில்கள் கட்டுவதில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் முன்னிறுத்தும் இரண்டு நோக்கங்களைப் பற்றி எடுத்துரைத்தார்கள். “முதலாவதாக, நமது பள்ளிவாயில்கள் இறைவணக்கத்திற்குரிய உரிமைகளை நிறைவேற்று -வதற்குரிய இடங்களாக நமது உறுப்பினர்களுக்கு பயன்படுகின்றன. இரண்டாவதாக, நமது பள்ளிவாயில்கள் இறைவனின் படைப்பினங்களுக்குத் தொண்டு செய்வதிலும் இஸ்லாத்தின் போதனைகளைப் பரவச் செய்வதிலும் நமக்குத் துணை புரிகின்றன.”

பின்னர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அருகில் வாழும் மக்களிடம் தோன்றியிருக்கச் சாத்தியமான அச்சங்களையும் தயக்கங்களையும் அகற்றும் விதமாக இவ்வாறு கூறினார்கள்: “இந்தப் பள்ளிவாயில் உங்களுக்கோ அல்லது உங்களது சக குடிமக்களுக்கோ எந்தத் துன்பத்தையும் கஷ்டத்தையும் இழைக்காது. சமூகத்தில் குழப்பத்தையும் வேற்றுமையையும் விதைப்பதற்குப் பதிலாக இந்தப் பள்ளிவாயில் நன்மைகளை ஒன்றுசேர்க்கும் சக்தியாக விளங்கும்.” கஅபத்துல்லாஹ்வின் உதாரணத்தைச் சுட்டிக் காட்டிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அது அனைத்து மக்களுக்கும் அனைத்து நாடுகளுக்குமான

உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பின் அடையாளச் சின்னம் என்று குறிப்பிட்டார்கள். எனவே முஸ்லிம்கள் அதனை முன்நோக்கியவாறு எந்தப் பள்ளிவாயிலில் நின்று தொழுதாலும் அந்த நோக்கங்களையே கருத்தில் கொள்ள வேண்டும்.

இஸ்லாம் வன்முறையையும் போரையும் தூண்டுகின்ற பயங்கரவாத மார்க்கம் என்ற இஸ்லாத்தின் எதிரிகளின் ஆட்சேபனையைக் குறித்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இந்தக் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானதாகும் என்று குறிப்பிட்டார்கள். இஸ்லாத்தை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நேரடியாக முஸ்லிம்கள் மீது அநீதியாக போர் திணிக்கப்படுகின்ற விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர்த்து வேறு எப்பொழுதும் போர் புரிவதற்கோ அல்லது

சூரா பகராவின் 126 -வது வசனத்தைக் குறிப்பிட்டு தீமையிலிருந்து அடைக்கலமாகவும், முழு மனித குலமும் ஒன்றுசேர்வதற்கான அமைதி மற்றும் பாதுகாப்பின் வீடாகவும் அல்லாஹ் கஅபத்துல்லாஹ்வைக் கட்டியிருப்பதாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள். சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுடன் அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்வதும், பிறருக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்குவதும் முஸ்லிம்களின் கடமை என்பதை இந்த வசனம் வலியுறுத்திக் கூறுகிறது. ஒருவர் மற்றவர்களுக்கு அமைதிக்குரிய வழியாகத் திகழத் தவறி விட்டால், அவர் ஆணாயினும், பெண்ணாயினும் தம்மை உண்மையான முஸ்லிம் என்று அழைத்துக் கொள்ள முடியாது.




வன்முறையைக் கையில் எடுப்பதற்கோ இஸ்லாத்தின் போதனைகள் முஸ்லிம்களுக்கு அனுமதி தரவில்லை. இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. எனவே உலகளாவிய மார்க்கச் சுதந்திரத்தை நிலைநாட்டவும் அதனைப் பாதுகாக்கவும் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு தம்மைத் தற்காத்துக் கொள்ள அனுமதி வழங்கினான். இந்த அனுமதி தனிப்பட்ட முறையில் பழிவாங்குவதற்காக அல்ல. தமது உயிர்களும் உடைமைகளும் மிகப்பெரும் அச்சுறுத்தலின் கீழ் இருந்த போதிலும் ஆரம்ப கால முஸ்லிம்கள் எவ்வாறு நல்லொழுக்க நெறிமுறைகளையும் கடுமை வாய்ந்த போர் விதிமுறை -களையும் பின்பற்றினார்கள் என்பதை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் விளக்கினார்கள்.

பின்னர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் சூரா அல் ஃபுர்கான் வசனம் 64 -ன் பொருளைக் குறிப்பிட்டார்கள். இந்த வசனம் அறிவற்றவர்கள் அல்லது பகைமை காட்டுபவர்கள் பழித்துரைத்தாலோ அல்லது கடுமையுடன் பேசினாலோ எவ்வாறு பதில் தர வேண்டும் என்று முஸ்லிம்களுக்கு அறிவுறுத்துகிறது. ஆத்திரமூட்டப்பட்டால் கோபத்துடன் பதில் கொடுக்காமல், கண்ணியத்துடன் பொறுமை செய்து "உங்கள் மீது சாந்தி உண்டாவதாக" என்று கூறியவாறு கடந்து சென்று விட வேண்டும். வலுவான தாக்குதலையும் ஆத்திரமூட்டலையும் அதே பாணியில் எதிர்கொள்வதற்குப் பதிலாக முஸ்லிம்கள் தமது பெருமைகளை ஒதுக்கி வைத்து விட்டு அமைதிக்கான செய்தியைத் தெரிவிப்பதன் மூலம் பதிலளிக்க வேண்டும்.

மற்றும் அனைத்து வகையான மோதல்களையும் தவிர்க்க வேண்டும்.

திருக்குர்ஆன் கூறும் இறைவன் முழு மனித குலத்தின் இறைவன் ஆவான் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் விளக்கினார்கள். "ஒரு முஸ்லிம் மனித குலத்திற்கு துக்கம் அல்லது துன்பத்தை ஏற்படுத்துகின்ற ஒரு நபராக இருப்பதை விட ஆறுதல் அளிக்கவும், அமைதிக்கான ஆதாரமாகவும், மற்ற எல்லா மக்களுடனும் அன்பையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும். ஓர் உண்மையான முஸ்லிம் மற்றவர்களின் சுமையைத் தாங்கி, அவர்களின் வலியையும் துக்கத்தையும் தனது வலியாகவும் துக்கமாகவும் உணர்கிறார். இந்த உணர்வில் தான் நாங்கள் எங்கள் பள்ளிவாயில்களைக் கட்டுகின்றோம்" என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சில மனிதாபிமான சேவைகளை எடுத்துரைத்த ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பள்ளிவாயில்களைக் கட்டுவது மட்டுமல்லாமல், அதன் மார்க்க நம்பிக்கையால் உந்தப்பட்டு, மருத்துவமனைகள், மருத்துவ கிளினிக்குகள், பள்ளிக்கூடங்கள், சுத்தமான நீர் வசதிகள் மற்றும் பல மனிதாபிமான திட்டங்களையும் உருவாக்கி வருகிறது. உதாரணமாக, இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மனிதாபிமான நிவாரண குழுக்களை அனுப்புவது போன்றவை. இதுபோன்ற அனைத்து சேவைகளும் உதவிகளும் தேசியம், இனம், மதம் அல்லது நம்பிக்கை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் வழங்கப்படுகின்றன என்றும், மனிதகுலத்தின் துன்பத்தைப் போக்குவதே ஜமாஅத்தின் ஒரே குறிக்கோள் மற்றும் இதயப்பூர்வமான விருப்பம் என்பதால், ஜமாஅத் வேறு எந்த வெகுமதியையும் நாடவில்லை என்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வலியுறுத்தினார்கள். "மனிதகுலத்திற்கு சேவை செய்வதே எங்கள் நோக்கம் மற்றும் குறிக்கோள் ஆகும். ஏனென்றால் எல்லாம் வல்ல இறைவனின் உரிமைகளை மட்டுமல்ல, அவனுடைய படைப்பின் உரிமைகளையும் நாம் நிறைவேற்ற வேண்டும் என்று இஸ்லாம் நமக்குக் கற்பித்துள்ளது" என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கலந்து கொண்டவர்களிடம், இஸ்லாத்தின் உண்மையான அமைதி மற்றும் பாதுகாப்பின் செய்தியை முழு உலகிற்கும் எடுத்துச் செல்வதையும், அதில் முதன்மையான பங்கை வகிப்பதையும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தமது பொறுப்பாகக் கருதுகிறது என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளின்படி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் மற்றும் முஸ்லிம்களின் நம்பிக்கைகளில் ஊடுருவிய மார்க்கப்போர் தொடர்பான தவறான கருத்துக்களை அன்னார் எவ்வாறு சரி செய்தார்கள் என்பதைப் பற்றியும் கூறினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: "எனவே டல்லாஸில் உள்ள உள்ளூர் மக்கள் இந்தப் பள்ளிவாயிலுக்குப் பயப்படத் தேவையில்லை. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தால் கட்டப்பட்ட இந்தப் புதிய பள்ளிவாயில், இஸ்லாத்தின் அமைதி, மரியாதை மற்றும் சகிப்புத்தன்மை போன்ற ஞானமிக்க போதனைகளை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் பிரதிபலிக்கும். எனவே இதில் ஏதேனும் சந்தேகம் அல்லது அச்சம் உள்ளவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுமாறு கேட்டுக் கொள்கிறேன். நம்மிடமிருந்து வேறுபட்ட நம்பிக்கை கொண்டவர்களை, எதிர் கொள்வது அல்ல; அவர்களை அரவணைத்துச் செல்வதுதான் நமது போதனை. எங்களின் போதனைகள் எதிரிகளைத்






தாக்குவது அல்ல; அவர்களைப் பாதுகாப்பதும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் ஆகும். இந்தப் பள்ளிவாயில் மனிதகுலத்தின் மீது அன்பு, இரக்கம் மற்றும் அனுதாபத்தைத் தவிர வேறு எதையும் வெளிப்படுத்தாது என்பதை உறுதியாக நம்பலாம். இந்தப் பள்ளிவாயிலுக்குள் நுழைபவர்கள் சமுதாயத்திற்குச் சிறந்த முறையில் பங்களிக்கவும், சேவை செய்யவும் முயல்பவர்களாக இருக்க வேண்டும்."

உலகத்தின் தற்போதைய ஆபத்தான நிலையைப் பற்றி ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள். சந்தேகத்திற்கு இடமின்றி, உலகம் முழுவதும் உள்ள நாடுகள் அரசியல், பொருளாதார மற்றும் சமூக அமைதி -யின்மையின் கொடூரமான புயலால் சூழப்பட்டிருப்பதால், இன்று உலகம் பேரழிவின் விளிம்பில் தள்ளாடுகிறது. உக்ரைனில் போர் பல மாதங்களாக பொங்கி எழுகிறது. மேலும் இன்னும் பெரிய கொந்தளிப்பு மற்றும் போர் என்ற கருமேகங்கள் நமக்கு மேலே சூழ்ந்து கொண்டிருக்கின்றன. உலகம் தொடர்ந்து துருவப்படுத்தப்படுவதால், எதிர்க்கும் அரசியல் குழுக்கள் மற்றும் அணிகள் படிப்படியாக வேரூன்றியுள்ளன. இதன் விளைவாக உலகின் அமைதியும் பாதுகாப்பும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. சமீப காலம் வரை, அணு ஆயுதங்களைக் கட்டவிழ்த்து விடுவதாக அச்சுறுத்துவது நினைத்துப் பார்க்க முடியாததாகக் கருதப்பட்டது, ஆனால் இப்போது இதுபோன்ற அச்சுறுத்தல்கள் கிட்டத்தட்ட தினசரி அடிப்படையில் வெளியிடப்படுகின்றன. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், பல ஆண்டுகளாக, உலகின் நிலையற்ற நிலையை உலகத் தலைவர்கள் மற்றும் சாதாரண பொதுமக்களுக்கு எடுத்துரைக்க எப்படி முயற்சி செய்து வருகிறது என்பதையும் பெரிய நன்மைக்காக இருக்கும் எந்த வேற்றுமைகளையும் ஒதுக்கித் தள்ள வேண்டும் என்பதை எவ்வாறு வலியுறுத்தி வருகிறது என்பதையும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் விளக்கினார்கள். "நான் எப்போதும் அமைதியின் உண்மையான மதிப்பை மக்களுக்குப் புரிய வைப்பதற்கு முயன்று வருகிறேன். மேலும் அமைதியின்மையைத் தூண்டுவதற்கும், இறுதியில் வெடித்து கொதிப்பதற்கும் வழிவகுக்கும் விரக்திகளை ஏற்படுத்துகின்ற பிளவுபடுத்தும் மற்றும் அநீதியான கொள்கைகளின் அபாயங்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கும் நான் எப்போதும் முயன்று வருகிறேன். எனவே, நமது தலைவர்களையும் அரசியல்வாதிகளையும் இந்த சரிவில் இருந்து பின்வாங்குமாறு வலியுறுத்த வேண்டும். ஏனெனில் ஓர் உலகளாவிய போர் வெடித்தால், அது உலகம் இதுவரை கண்டிராத வகையில் இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை."

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மேலும் கூறினார்கள்: "நம்மிடையே உள்ள வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு, சமூகத்தில் அமைதியை நிலைநாட்ட அயராது உழைக்க வேண்டும் என்பதே எனது அழுத்தமான வேண்டுகோள் மற்றும் உலகத்திற்கான செய்தியாகும்."

அமைதியை நிலைநாட்டுவதில் செயல்ரீதியான பங்கு வகிக்குமாறு அனைவரையும் வலியுறுத்தும் அதே வேளையில், "கொடுமை அல்லது அநீதி எங்கு நடந்தாலும், அதை நாம் கண்டிக்க வேண்டும். பழிவாங்கும் அச்சுறுத்தல் மற்றும் வன்முறையின் மூலம் வெப்பநிலையை உயர்த்துவதற்குப் பதிலாக, நமது நாடுகளைப் போரை நோக்கித் தள்ளுவதற்குப் பதிலாக, சர்வதேச மட்டத்திலும், நாடுகளுக்குள்ளும் இருக்கும் பதட்டங்களை இராஜதந்திரம் மற்றும் ஞானத்தின் மூலம் குளிர்விக்க முயற்சிக்க வேண்டும் என்று நாம் நமது அரசியல் தலைவர்களை வலியுறுத்த வேண்டும். உலகின் அமைதியும் பாதுகாப்பும் அவர்களின் முக்கிய குறிக்கோளாக இருப்பதை அவர்கள் உறுதி செய்ய வேண்டும்" என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்.

*(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்...)*




# அச்சுறுத்தும் அணு ஆயுதப் போர் – உயிர் பிழைப்பவர்கள் வெற்றியாளர்கள் அல்ல

**பேராசிரியர் அமத்துர் ரஸாக் கார்மிக்கேயல்**
**MD, M Ed, FRCS (Gen Surg.), MBBS,**
உதவி மேலாளர், ரிவியூ ஆ்.்.ப் ரிலீஜியன்ஸ்

**தமிழாக்கம்: அபூ அப்துல்லாஹ்**

விரைவில் நிகழவிருக்கும் உலகின் அணு ஆயதங்களின் பயன்பாடுகள் கற்பனைக்கு எட்டாத வகையில் பேரழிவைத் தரக்கூடியதாக இருக்கும். மரணங்களின் எண்ணிக்கை பல இலட்சங்களைத் தாண்டி விடும். உலக மக்கள் தொகையில் பெரும்பாலார் முடமாகிப் போவர். மேலும் கதிர்வீச்சின் பாதிப்பிற்குள்ளாகி நிரந்தர ஆரோக்கிய குறைபாடுகளைப் பெற்று விடுவர். ஒன்பது அணு ஆயுத சக்திகளான அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, இஸ்ரேல், பாக்கிஸ்தான், இந்தியா, வடகொரியா ஆகிய நாடுகளிடம் சுமார் 13000 அணு ஆயுதங்கள் உள்ளன. இந்த ஆயுதங்களின் அதிசக்தி வாய்ந்த அழிக்கும் ஆற்றலின் காரணமாக மனித குலம் எஞ்சியிருப்பதற்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, அணு ஆயுதம் பொருத்தப்பட்ட ஓர் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலின் ஆயுதங்களின் ஆற்றல், ஜப்பானில் வீசப்பட்ட இரண்டு அணு குண்டுகள் உட்பட இரண்டாம் உலகப் போரில் வீசப்பட்ட அத்தனை குண்டுகளின் ஆற்றலைக் காட்டிலும் ஏழு மடங்கு அதிகமானதாகும்.[1]

அமெரிக்காவின் 5500 அணு ஆயுதங்களில் 1389 தயார் நிலையில் உள்ளன. ஐந்து ஐரோப்பிய நாடுகளில் விமான ஏவுதளங்களில் பொருத்தப்பட்டுள்ள அணு ஆயுதங்களை 5 நிமிடத்திற்குள் ஏவிவிட முடியும். நீர்மூழ்கிக் கப்பலில் பொருத்தப்பட்டுள்ள அணு ஆயுதங்களை 15 நிமிடத்திற்குள் ஏவிவிட முடியும். உலகில் உள்ள அணு ஆயதங்களில் 90 சதவீதம் அமெரிக்கா மற்றும் ரஷ்யா வசம் உள்ளன. இவ்விரு வல்லரசுகளுக்கும் இடையில் அதிகரித்து வரும் பதற்றம் முழு மனித குலத்தின் நல்வாழ்வு மற்றும் எஞ்சி நிற்றலுக்குப் பெரும் கவலையைத் தரக் கூடியதாகும். அமெரிக்க அணு ஆயுதங்களிலேயே மிகவும் அழிவைத் தரவல்ல பி80 கிராவிட்டி அணு குண்டு (B80 Gravity Bomb) ஹிரோஷிமா நகரைக் கிட்டத்தட்ட முற்றிலும் அழித்து விட்ட அணு குண்டைக் காட்டிலும் 80 மடங்கு அதிக சக்தி வாய்ந்ததாகும்.[2]

ஹிரோஷிமாவில் வீசப்பட்ட 15 கிலோ டன் குண்டு சுமார் 1,60,000 மக்களின் உயிரைப் பலி வாங்கியது.[3]

இதன் வீரியத்தை அறிந்து கொள்வதற்காக, உதாரணமாக, இங்கிலாந்தின் மீது அணு ஆயுததாக்குதல் தொடுக்கப்பட்டால் அதில் 2.9 கோடி பிரிட்டன் மக்கள் மரணித்து விடுவர் என்றும் 64 லட்சம் பேர் படுகாயமடைவர் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.[4]

இலண்டனில் மட்டும் 50 இலட்சம் மக்கள் மரணிப்பர். சுமார் 5 இலட்சம் பேர் காயமடைவர். சுகாதாரப் பராமரிப்பு, போக்குவரத்து, எரிசக்தி, சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட அனைத்து சேவைகளும் சீர்குலைந்து விடும். பாதிப்பிற்குள்ளானவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு மருத்துவமனைகளில் போதிய படுக்கை வசதிகள் இருக்காது. இலட்சக்கணக்கான மனித மற்றும் விலங்குகளின் பிணங்கள் அழுகிப்போவதால் ஏற்படும் உயிரியல் விளைவுகள்


அணுகுண்டு வீசப்பட்ட பின்னர் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் தோல் அதிக வெப்பத்தினாலும், கதிர்வீச்சினாலும் உருகிப்போய் விட்டதை விளக்கும் ஹிரோஷிமா அருங்காட்சியகத்தில் உள்ள படம்


அணு சக்தி பொருத்தப்பட்ட ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்

நிலைமையை இன்னும் மோசமாக்கி விடும். மான்செஸ்டர் நகரின் மீது ஒரு சிறிய அளவிலான ஒரு 100 கிலோ டன் - அணு ஆயுதம் பயன்படுத்தப்பட்டாலும் கூட அதனால் 81000 பேர் மரணித்து விடுவர். 2,12,000 பேர் படுகாயமடைவர். நகரின் மொத்த மக்கள்தொகையான 5,10,000 பேருக்கான அடிப்படை உள்கட்டமைப்புகளும் அவசரகால சேவைகளும் முற்றிலும் அழிக்கப்பட்டு விடும்.[5]

உயிர் பிழைப்பவர்களுக்கு ஏற்படும் பின் விளைவுகளைப் பொருத்தவரை அவர்கள் ஓடும் நீர் குழாய் கழிவுநீர், கடைகளில் உணவு மற்றும் சுகாதார வசதிகள் இல்லாத உலகையே காண்பர்.[6]

கதிர்வீச்சின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால விளைவுகளைச் சமாளிப்பதற்கு தேவையான வசதிகளோ மனித வளமோ சுகாதார அமைப்புகளிடம் இருக்காது.[7]

அணுஆயுதப் போரினால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளில் அச்சுறுத்தக்கூடிய அணுக் குளிர் காலம் முக்கியமானதாகும். அணு ஆயுத வெடிப்பினால் வெளிப்படும் குப்பைத்துகள்கள் மேலெழும்பி வளிமண்டலத்தில் படர்ந்து சூரிய ஒளியை மறைத்து விடும். வளிமண்டலத்தின் ஸ்ட்ரேட்டோஸ்பியர் அடுக்கில் ஏற்படுத்தும் பாதிப்பின் காரணமாக புறஊதாக்கதிரின் (UV Rays) குறியீடு 80 சதவீதம் அதிகமாகி விடும். வருடாந்திர வளரும் பருவம் (annual growing season) 10 முதல் 45 நாட்கள் குறைந்து விடும்.[8&9]

இதனால் உலக மக்களுக்குப் பரவலான உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு விடும். உலகின் அணு ஆயுதங்களின் 2.5% தொலைநிலைப் பரிமாற்றம் எந்த அளவுக்குக் காலநிலை மற்றும் விவசாய சீர்கேட்டிற்கு வழிவகுக்கும் எனில் அது மனித உயிர் வாழ்வை நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குக் கடுமையானதாக ஆக்கி விடும்.[10]

பேரழிவைத் தரும் உயிரிழப்பு, அணுசக்தி குளிர்காலம், சுற்றுச்சூழல் அமைப்பின் உலகளாவிய இழப்பு, போதிய சுகாதார வசதிகளற்ற நிலை, சீர்குலைந்த பொருளாதாரங்கள் மற்றும் அணுசக்தி பஞ்சம் ஆகியவை அணுசக்தி பேரழிவின் வெளிப்படையான விளைவுகளாகும். தற்போதைய உலகப் பதட்டங்கள் தீர்க்கப்படாவிட்டால் மனித குலத்திற்கு இவைதாம் காத்திருக்கின்றன.

இத்தகைய பேரழிவுகரமான போரைத் தவிர்க்க அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அல்லாஹ்விற்கும் அவனது படைப்பிற்கும் கொடுக்க வேண்டிய உரிமைகளை நிறைவேற்றுமாறு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தி வருகிறார்கள். உலகில் அநீதிகளும் அடக்குமுறைகளும் அதிகமாகும் போது மக்கள் இவ்வுலகில் தண்டனையை எதிர்கொள்



அணு குண்டு வீசப்பட்ட பின்னர் ஹிரோஷிமா


அணு சக்தி பஞ்சம்

-கின்றனர் என்பதை ஹுஃஸூர் அவர்கள் விளக்கியுள்ளார்கள்.[11]

அநீதி மற்றும் பிறர் மீது இழைக்கப்படும் கொடுமைகளுக்காக இவ்வுலகில் அல்லாஹ்வின் கோபம் இறங்குகிறது. தற்போதைய உலகப் பதட்டங்களுக்கு முழுமையான நீதியின் அடிப்படையில் அமைதியான தீர்வைக் காண பிரார்த்தனை செய்யவும் உலகத் தலைவர்களிடம் வேண்டவும் ஹுஃஸூர் அவர்கள் அறிவுறுத்தி -யுள்ளார்கள். இந்த உலகளாவிய பேரழிவு தவிர்க்கப்படட்டுமாக! ஆமீன்.




குறிப்புகள்:

(1) இணையதளம்: Union of Concer - ned Scientists https://www.ucsusa.org /nuclear-weapons/worldwide

(2) இணையதளம்: Union of Concerned Scientists https://www.ucsusa.org/nuclear-weapons/worldwide

(3) Atomic Heritage Foundation. Bombings of Hiroshima and Nagasaki 1945. 2014

(4) நூல்: Campbell D.1982 War Plan UK-the Truth about Civil Defence in Britain.London: Burnett Books, 1982

(5) நூல்: Moyes R, Webber P. Short case study of the direct humanitarian impacts from a single nuclear weapon detonation on Manchester, UK. Article 36. 2013

(6) நூல்: Greene O, Rubin B, Turok Net al. London after the Bomb.Oxford: Oxford University Press, 1982

(7) https://doi.org/10.1016/j.ijid.2022.04.016

(8) ஆய்வுக்கட்டுரை: Hampson P. Photochemical war on the atmosphere. Nature1974;250:18991

(9) ஆய்வுக்கட்டுரை: Mills M, Toon O, Lee-Taylor J, Robock A. Multidecadal global cooling and unprecedented ozone loss following a regional nuclear conflict. Earth's Future2014;2:161176

(10) ஆய்வுக்கட்டுரை: F. Boulton, T. Dunn. Journal of Public Health (2020)

(11) ரிவியூ ஆ.்.ப் ரிலீஜியன்ஸ் :https://www.reviewofreligions.org/37861/personal-moments-with-his-holiness-worldwide-head-of-the-ahmadiyya-muslim-community-discussing-the-current-state-of-the-world.

(நன்றி: ரிவியூ ஆ.்.ப் ரிலீஜியன்ஸ், செப்டம்பர் 2022)

---

*(6-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் இறைவனை நம்பாத அல்லது எந்த நம்பிக்கையிலும் சேராத அனைவரும் மனித நேயத்திற்காக ஒன்றுபட வேண்டும் என்று ஹுஃஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வலியுறுத்தினாரகள், மேலும் உலகில் உண்மையான மற்றும் நீடித்த அமைதி தோன்றுவதற்கு மார்க்கவாதிகள் பிரார்த்தனை செய்யுமாறு வலியுறுத்தி -னாரகள். அனைத்து வகையான அழிவுகள் மற்றும் பேரழிவில் இருந்து உலகம் காப்பாற்றப்பட வேண்டும் என்றும், எல்லாம் வல்ல இறைவன் உலகின் மீது கருணை காட்டட்டும் என்றும், ஹுஃஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பிரார்த்தனை செய்தாரகள்.

இறுதியில், ஹுஃஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: டல்லாஸில் உள்ள எங்கள் புதிய பள்ளிவாயில் என்றென்றும் அனைத்து மனிதகுலத்திற்கும் அமைதி மற்றும் முன்னேற்றத்திற்குமான உறைவிடமாகச் சேவை செய்ய நான் பிரார்த்திக்கிறேன். அதன் ஆன்மீக ஒளி அதன் சுற்றுப் புறங்களை ஒளிரச் செய்து, அமைதி மற்றும் மனிதநேயத்தின் அடையாளமாக என்றென்றும் பிரகாசிக்கட்டும்.

ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மீண்டும் ஒரு முறை கலந்து கொண்டவர்களுக்கு நன்றி கூறினார்கள். ஹுஃஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் துஆவுடன் வரவேற்பு நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

(நன்றி: அல்ஹகம் 14.10.2022)

வாக்கிஃபாத்தே நவ் உடன் சந்திப்பு நிகழ்ச்சி

கேள்வி மற்றும் பதில்



# நாம் தயாராக இருக்க வேண்டும்!




கேள்வி:

ரஷ்யா உக்ரைன் போரின் விளைவாக உலகில் ஏற்படக் கூடிய மாற்றம் குறித்து ஹுஸூர் அவர்கள் என்ன கருதுகிறீர்கள்? குறிப்பாக சமீபத்தில் உக்ரைனின் உள்பகுதிகளில் ரஷ்யாவின் குண்டு வீச்சுகள் நடைபெறுகின்றனவே?

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் பதில்:

இந்தவிஷயம் உக்ரைன் ரஷ்யா போரோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. இது ரஷ்யா மற்றும் உக்ரைனின் எல்லைகளைத் தாண்டிச் செல்வதாகத் தெரிகிறது. முழு உலகமும் இதில் ஈடுபடப்போகிறது. முழு உலகமும் இந்தப் போரில் ஈடுபட்டால், நான் நம்புகிறேன் பல மக்கள் இவ்வாறு எல்லாம் ஏன் நடைபெறுகிறது என்று சிந்திக்க ஆரம்பிப்பார்கள். மிகக் குறைந்தவர்களே எஞ்சியிருப்பார்கள். அவர்கள் என்ன நிகழ்ந்து விட்டது என்பதைக் குறித்து சிந்திப்பார்கள். எவர்கள் எஞ்சியிருப்பார்களோ அவர்கள் தமது உண்மையான படைத்தவனை அறிய முற்படுவார்கள். நல்ல விஷயங்களின் பக்கமும், உண்மையான மார்க்கத்தைத் தேடுவதிலும் முனைப்பு காட்டுவார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு நேர்வழி காட்டுவது அஹ்மதி ஆண்கள் மற்றும் பெண்களின் கடமையாகும். நீங்கள் உங்களது உலக ஆசைகளின் விளைவை தற்போது கண்டு கொண்டீர்கள். இப்போது அல்லாஹ் கூறுகிறான்: “நீங்கள் எனது வழிகாட்டலைப் பின்பற்றுங்கள்; எனது போதனைகளைப் பின்பற்றுங்கள். நான் கூறியதன்படி செயலாற்றுங்கள். என் மீது உறுதியான நம்பிக்கை கொள்ளுங்கள்.” அதன் பின்னரும் மக்கள் உணரவில்லை என்றால், பின்னர் மற்றொரு நரகம் வரும். முழு உலகும் அழிந்து விடும். எனவே என்ன நடைபெறப்போகிறது என்பதை நம்மால் கூற முடியாது. எனவே நாம் துஆ செய்ய வேண்டும். மார்க்கத்தின் உண்மையான தூதுச்செய்தியைப் பரப்புவதற்கும், மக்களை அவர்களின் படைத்தவனின் பக்கம் கொண்டு வருவதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

(வாக்கி.்.பாத்தே நவ் உடன் சந்திப்பு நிகழ்ச்சி, சில்வர் ஸ்பிரிங், மேரிலேண்ட், அமெரிக்கா. நாள்: 12.10.2022)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

11

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

1885 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் நாள் பெஷாவரைச் சேர்ந்த ஆர்ய சமாஜ உறுப்பினரான பண்டிட் லேக்ராம் அமிர்தசரஸிலிருந்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் தாம் காதியானுக்கு வந்து இறை அடையாளங்களைக் காண விரும்புவதாகவும், அதற்கு முன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) ₹2400 –ஐ அவர்களால் திருப்பி எடுக்க முடியாத விதத்தில் அரசாங்க கஜானாவில் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். இதற்குப் பதிலாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஏப்ரல் 7 ஆம் நாள் ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் பண்டிட் லேக்ராம் ஆரிய சமாஜிகளின் பிரதிநிதி என்பதற்கு ஏதேனும் ஆதாரம் காட்டும்படிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் இதற்குப் பதிலாக ஏப்ரல் 9 ஆம் நாள் பண்டிட் லேக்ராம் மரியாதைக் குறைவாகவும் ஆட்சேபனைக்குரிய விதத்திலும் பதில் எழுதியிருந்தார். எனவே 1885 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் தேதி எழுதிய கடிதத்தில் உடனடியாகக் காதியானுக்கு வந்து அது தொடர்பான பூர்வாங்க வேலைகளைக் கவனிக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். மேலும் லாஹூரைச் சேர்ந்த முன்ஷி ஜீவன் தாஸ் போன்ற கண்ணியமான ஆரிய சமாஜிகளின் வழிகாட்டுதலின்படி நடப்பதற்கு பண்டிட் லேக்ராம் தயாராக இருக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தி இருந்தார்கள். ஆனால் பண்டிட் லேக்ராம் ஏப்ரல் 29 ஆம் நாள் மிகவும் இழிவுபடுத்தும் கடிதம் ஒன்றை எழுதினார். இறை அடையாளத்தைக் காட்டும்படி வற்புறுத்தினார். அவர் ஆரிய சமாஜிகளின் அங்கீகாரம் பெற்ற தலைவர் இல்லை என்பதாலும் பணத்தை முன்கூட்டியே கஜானாவில் போட்டுவைக்கும் படி வற்புறுத்தியதாலும் தாம் காட்டும் இறையடையாளத்தைக் கண்ட பின்னர் அவர் முஸ்லிமாக மாறாவிட்டால் இழந்து விடத்தக்க விதத்தில் ₹2400 –ஐ முன்கூட்டியே செலுத்தும்படி தமது 17.07.1885 ஆம் தேதியிட்ட கடிதத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இதற்குப் பதிலாக பண்டிட் லேக்ராம் சூரியனை கிழக்கில் அஸ்தமிக்கச் செய்ய வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்து ஜூலை 20 ஆம் நாள் ஒரு கடிதம் எழுதினார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 1885 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் நாள் எழுதிய கடிதத்தில் இந்த விஷயத்தில் தமது நிலை என்ன என்பதை விளக்கியிருந்தார்கள். ஆனால் பண்டிட் லேக்ராம் 5.8.1885 அன்று எழுதிய கடிதத்தில் தமது முந்தைய நிலைமையை தொடர்ந்து வலியுறுத்தினார். எனவே காதியானுக்கு வந்து தம்மை நேரில் சந்திக்கும்படி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் பண்டிட் லேக்ராம் எந்த நியாயத்திற்கும் கட்டுப்படவில்லை.

1885 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் தேதி வாக்கில் பண்டிட் லேக்ராம் காதியானுக்கு வந்தார். தாம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுடன் வாதம் நடத்த விரும்புவதாகவும், இஸ்லாத்திற்கு ஆதரவான இறை அடையாயளத்தைக் காண விரும்புவதாகவும் கூறினார். ஆனால் அவர் அதனை வெளிப்படுத்திய விதம், அதில் அவருக்கு உண்மையான ஆர்வம் இல்லை என்பதைக் காட்டுவதாக அமைந்திருந்தது. அவருக்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கும் இடையில் சில கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இரு தரப்புக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி ஹஸ்ரத் அஹ்மது (அலை) பண்டிட் லேக்ராமுக்குத் தெரிவிக்கும் முன்னறிவிப்பு நிறைவேறவில்லை என்றால், ஹஸ்ரத் அஹ்மது (அலை) ஆரிய சமாஜத்தில் சேர வேண்டும் அல்லது அபராதமாக ₹300/– செலுத்த வேண்டும் என்றும் அந்தப் பணம் ஷரம்பத் ராயிடம் கொடுத்து வைக்கப்பட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்த முன்னறிவிப்பு நிறைவேறினால், பண்டிட் லேக்ராம் இஸ்லாத்தில் இணைய வேண்டும் என்பதும் நிபந்தனையாக அமைந்தது. 1893 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் இந்த முன்னறிவிப்பு வெளியிடப்பட்டது. அதைப் பற்றி பின்னர் விரிவாக எடுத்துரைக்கப்படும். இந்தக் காலகட்டத்தில் பண்டிட் லேக்ராம் பல நாட்கள் காதியானில் தங்கியிருந்து உள்ளூர் இந்துக்களை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிராகத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அழைப்பை ஏற்று இன்னொருவரிடமிருந்தும் பதில் வந்தது. அது குஜ்ரான்வாலாவில் வாழ்ந்து வந்த கிறித்தவப் பாதிரியான ரெவரண்ட் E.P. சாஃப்ட் என்பவரிடமிருந்தாகும். அவர் கிறித்தவ மார்க்கத் தத்துவதில் சிறந்து விளங்கியவராகக் கருதப்பட்டார்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அவர் பின்வரும் மூன்று நிபந்தனைகளை முன் வைத்தார்:

1. முன்னதாகவே ₹ 600/– குஜ்ரான்வாலாவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2. அவர் காதியானுக்கு வந்தால் தங்குவதற்கு வசதியான ஒரு வீட்டை ஏற்பாடு செய்ய வேண்டும். அதில் ஏதாவது வசதிக் குறைவு ஏற்பட்டால் அவர் உடனடியாக குஜ்ரான்வாலாவுக்குத் திரும்பி விடுவார். அவ்வாறு நடந்தால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் செலுத்திய ₹ 600 –ஐ அவர்கள் இழந்து விட வேண்டும்.

3. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் காட்டுவதாகக் கூறும், இறையடையாளம் யூக்லிட் என்னும் கணிதமேதையின் தத்துவங்களில் காணப்படும் ஜியோமிதி உண்மைகளைப் போன்றதாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், தாம் வெளியிட்ட அறிக்கையில் முன் பணம் எதுவும் தருவதாகக் கூறாவிட்டாலும், அவர் கூறும் தொகையை முன் பணமாகச் செலுத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அறிவித்தார்கள். தங்குவதற்கு வசதியான ஒரு வீட்டை ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைப் பொருத்தவரை, தம்முடைய விருந்தினரான அவரைத் தம்மால் முடிந்த வரை நல்ல முறையில் உபசரிப்பதாகவும், வேண்டுமானால் அவர் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வீட்டை முன்னதாகவே பார்வையிட்டுத் திருப்திப்பட்டுக் கொள்ளலாம் என்றும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தெரிவித்தார்கள். அதே நேரத்தில் கிறித்தவ மத போதகர் ஒருவர் தாம் தங்குவதற்கு வசதியான வீட்டைப் பற்றி கவலைப்படுவதைப் பற்றி தமது வியப்பை அன்னார் (அலை) வெளிப்படுத்தாமல் இல்லை. அவரது அந்த வேண்டுகோள் இயேசுவின் நடைமுறைக்கு உகந்ததாக இல்லை என்பதையும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் அவர் உண்மையை உணர்ந்து கொள்வதில் உண்மையான அக்கறையுள்ளவராகத் தெரியவில்லை. மேலும் யூக்லிட் என்னும் கணிதமேதையின் தத்துவங்களில் பல குறைபாடுகள் இருப்பதையும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். தாம் காட்டவிருக்கும் இறையடையாளம் தெளிவானதாகவும், காண்பவர் ஏற்றுக் கொள்ளும் விதத்திலும் அமையும் என்றும் கூறினார்கள். ஆனால் இந்தக் கடிதப் போக்குவரத்தின் விளைவாக நிகழ்ச்சி எதுவும் நடைபெற்றதாக தெரியவில்லை.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பதிவுத் தபாலில் அனுப்பிய கடிதத்தைப் பற்றி பிற மக்களும் ஏதாவது ஒரு வகையில் அறிந்திருப்பர். ஆனால் அவர்களில் யாரும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களுடைய கூற்றின் உண்மைத் தன்மையைப் பரிசோதித்துப் பார்க்க முன் வரவில்லை. அற்புதங்களும், அடையாளங்களும் மார்க்கத்தின் ஓர் அங்கமாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆனால் அவ்வாறு நிகழும் என்பதை மக்கள் எப்போதும் சந்தேகித்தே வந்திருக்கின்றனர். சந்தேகம் கொள்பவர்களுக்கும், அறிவியலாருக்கும், பகுத்தறிவுவாதிகளுக்கும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. தம்முடைய வாதத்தின் பக்கம் உலக மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள்




தம்மால் ஆன முயற்சிகள் அனைத்தையும் செய்தார்கள். ஆனால் இப்படிப்பட்ட அரிய வாய்ப்பு தேவையற்ற விஷயங்களைக் கேட்டும், தேவையற்ற நிபந்தனைகளை விதிப்பதன் மூலமும் வீணடிக்கப்பட்டதைக் காணும் போது பெரிய புதிராகவும் பரிதாபமாகவும் காட்சியளிக்கின்றது.

உண்மையைத் தேடும் நேர்மையாளர்கள் அதற்காக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு உண்மையைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். இந்தப் பரிசோதனைக்குத் தேவையானவை என ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறுவதற்கு முழு உரிமை படைத்த நிபந்தனைகளில் தலையிடுவது என்பது முற்றிலும் நேர்மையற்ற செயலாகவே அமையும். எந்த ஓர் அறிவியல் அறிஞரும் தம்முடைய பரிசோதனைக் கூடத்தில் அப்படி ஒரு தலையீடு இருப்பதை

விரும்பமாட்டார். பிறகு ஏன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு மட்டும் அந்த உரிமை மறுக்கப்பட்டது? எல்லாக் காலங்களிலும் நிகழ்வது போல, பெரும்பாலான மக்களுக்கு இது போன்ற காரியங்களில் ஈடுபடுவதற்கு நேரம் கிடைப்பதில்லை. உண்மையைத் தேடும் நேர்மையாளர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைப் பின்பற்றத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் சவாலை ஏற்று அவர்களின் உண்மையைப் பரிசோதித்துப் பார்க்க முன்வராத மக்கள் உண்மையான ஆர்வம் இல்லாதவர்களாகவோ துணிச்சல் இல்லாதவர்களாகவோ இருந்தனர் என்று தெரிகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனித இனத்தின் ஆன்மீக முன்னேற்றத்தின் மீது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கொண்ட அக்கறை அவர்களைத் தனித்திருந்து இறையுதவியை நாடத் தூண்டியது. அந்நேரத்தில் அவர்கள் மனித இனத்தை இறைவன் பக்கம் திரும்பச் செய்கின்ற அளவிலான அற்புதம் நிறைந்த ஓர் இறையடையாளத்தைத் தமக்கு வழங்கும்படி பிரார்த்தனை செய்தார்கள். எனவே அவர்கள் இறை கட்டளைக்கிணங்க 1886 –ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஹோஷியார்பூருக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் ஒரு மாதம் வரை தனித்திருந்து இறைவணக்கங்களிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டார்கள். பிரார்த்தனையின் முடிவில் அவர்கள் ஆற்றல் மிக்க ஓர் இறையடையாளத்தைப் பற்றிய நற்செய்தியைப் பெற்றார்கள். அதனை அன்னார் 1886 –ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் வெளியிட்ட ஒரு பிரசுரத்தின் வாயிலாகத் தெரிவித்தார்கள். இறைவன் அவர்களுக்கு ஒரு மகத்துவம் மிக்க மகனை வழங்குவதாக வாக்குறுதி அளித்தான். வாக்களிக்கப்பட்ட இந்த மகன் 1889 –ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 –ஆம் நாள் பிறந்தார்கள். (இது தொடர்பான மேலும் விபரங்கள் பின்வரும் அத்தியாயம் ஒன்றில் விவரிக்கப்படும்.)



ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைச் சுற்றிலும் எப்போதும் நேர்மை என்னும் வெளிப்படையான சூழ்நிலை நிலவியது. அது அவர்களோடு பழகியவர்கள் அனைவரையும் கவர்ந்திழுத்தது. அவர்கள் தம்முடைய செயல்பாடுகளில் உண்மையான ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களைப் பொருத்தவரை மார்க்கம் என்பது ஒரு கேளிக்கையோ, பொழுதுபோக்கோ அல்ல. இறைவனின் இருப்பை அவர்கள் உண்மையாக உணர்ந்தார்கள். இறை இருப்பின் காரணமாக அவர்கள் புத்துணர்ச்சி பெற்றார்கள்; உற்சாகம் அடைந்தார்கள்; எழுச்சி பெற்றார்கள். அவர்கள் இறைவனோடு வாழ்ந்தார்கள்; இறைவன் அவர்களோடு இருந்தான். அவர்கள் தம்மைப் படைத்தவனோடு ஒன்றிப் போனார்கள். தம் முழு ஆற்றலோடும் ஆன்ம பலத்தோடும் அவர்கள் அவனை நேசித்தார்கள்.

அவர்கள் தம் நண்பர்களுக்கும், தம்மோடு பழகியவர் –களுக்கும் எழுதிய கடிதங்களிலிருந்து அவர்களுடைய மனநிலை நமக்குப் புரிய வருகிறது. லூதியானாவைச் சேர்ந்த மீர் அப்பாஸ் அலிக்கும் பிறருக்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுதிய கடிதங்கள் இப்பொழுது நூல் வடிவில் வெளிவந்துள்ளன. மார்க்க ஆன்மீக சம்பந்தமான பல விஷயங்கள் மீது அவை தெளிவை ஏற்படுத்துகின்றன. ஆனால் இறைவன் மீதும், அவனது படைப்பினங்கள் மீதும் அவர்கள் கொண்டுள்ள அன்பே அவற்றின் ஒவ்வொரு வார்த்தையையும் ஊடுருவி நின்று அதன் சாராம்சமாக விளங்குகின்றது.

காதியானைச் சேர்ந்த லட்சுமண் ராம், பாராமல், பிஷன் தாஸ், தாரா சந்த், நிஹால் சந்த், சந்த் ராம், ஃபதே சந்த், ஹர்கரன், பைஜ்நாத், பிஷன் தாஸ் பிராமின் ஆகிய கிராமக் காவலர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு சுவையான ஒரு கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தில், தாங்கள் இலண்டனிலும், அமெரிக்காவிலும் வாழும் உண்மையைத் தேடும் மக்களை நோக்கி அவர்கள் இறையடை –யாளங்களைக் காண விரும்பினால் காதியானுக்கு வரும்படி அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். ஆனால் தங்கள் அருகிலேயே வாழ்பவர்கள் என்ற அடிப்படையில், நாங்களே அதற்கு அதிக உரிமையுள்ளவர்கள் என்று (அந்த இந்து நண்பர்கள்) குறிப்பிட்டிருந்தனர். தங்கள் கோரிக்கைகளில் தாங்கள் அதிகமான எதனையும் கேட்கவில்லை என்றும், இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்கள் நிகழ்த்திக் காட்டும் சாதாரணமான அடையாளங்களையும், வெளியிடும் முன்னறிவிப்புகளையுமே நிகழ்த்திக் காட்டுமாறு கேட்டுக் கொள்வதாகவும் சத்தியம் செய்து கூறியிருந்தனர். ஆனால் நாங்கள் உடனடியாக இஸ்லாத்திற்கு மாறி விடுவோம் என்று உறுதி அளிக்க முடியாது; ஏனென்றால் உண்மையான மன மாற்றம் என்பது இறைவன் உண்மையின் பக்கம் வழிநடத்தும் போதுதான் நிகழ முடியும் என்று அவர்கள் நம்புவதாகவும் கூறியிருந்தனர். எனவே இயந்திரமயமான ஒரு மத மாற்றத்திற்கு உடன்படுவோம் என்று எங்களைக் கட்டுப்படுத்துவது இப்போதே கூற முடியாத ஒன்று எனவும் ஆயினும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் முன்னறிவிப்புகள் நிறைவேறிய செய்தியை நாங்கள் பத்திரிகை வாயிலாக உலகுக்குத் தெரிவிப்போம் என்றும் கூறியிருந்தனர். அடையாளங்களை நிகழ்த்திக் காட்ட வேண்டிய காலகட்டம் 1885 –ஆம் ஆண்டு செப்டம்பர் வரையாகும் என்றும் கெடு

தெரிவித்தனர். மேலும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எப்போது அழைத்தாலும் வந்து அவர்கள் வெளியிடும் முன்னறிவிப்புகளுக்கு சாட்சிபகர்வதாக உறுதி அளித்தனர்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்தக் கடிதம் கிடைத்ததற்கான ஒப்புகை அனுப்பினார்கள். மேலும் கடிதத்தில் காணப்பட்ட வேண்டுகோளில் அடங்கியிருந்த மிதமான உணர்வைப் பாராட்டினார்கள். ஒரு வருட காலத்திற்குள் ஓர் அடையாளத்தைக் காட்டுவேன் அல்லது முன்னறிவிப்பை வெளியிடுவேன் எனத் தேதி குறிப்பிடாமல் அறிவித்தார்கள். அந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட தேதியும் நமக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு லூதியானாவைச் சேர்ந்த மீர் அப்பாஸ் அலி, மவ்லவி அப்துல்லாஹ் சனவ்ரி, தீஹ் குலாம் நபியைச் சேர்ந்த ஷஹாபுத்தீன் ஆகியோரால் சான்றளிக்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை அமிர்தசரஸிலிருந்து ரியாதே ஹிந்த் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

இந்த உடன்படிக்கை வெளியிடப்பட்டது 1885 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாத ஆரம்ப நாட்களில் என்று தெரிய வருகிறது. இந்த உடன்படிக்கையின்படி 1885 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ஆம் தேதி ஒரு முன்னறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த முன்னறிவிப்பு நான்கு சாட்சிகளால் சான்று பகரப்பட்டது. அந்த முன்னறிவிப்பு பின்வருமாறு அமைந்துள்ளது:

“மிர்ஸா இமாம்தீன், நிஸாம் தீன் ஆகிய இருவரைப் பற்றி நான் ஓர் இறையறிவிப்பு பெற்றுள்ளேன். இன்றிலிருந்து 31 மாதங்களுக்குள் அவ்விருவரையும் ஒரு பெருந்துன்பம் சூழும். அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் மனைவியோ குழந்தையோ மரணிக்கும்; அதன் காரணமாக பேரதிர்ச்சியும், பேரிழப்பும் ஏற்படும். அந்தக் காலக்கெடு இன்றிலிருந்து அதாவது 1885 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ஆம் தேதியிலிருந்து ஆரம்பமாகும். பாரா மால், பைஜ் நாத், பிஷன் தாஸ் பிராமின், பிஷன் தாஸ் ஆகியோரால் சான்றளிக்கப்படுகிறது.”

அதன் பின் 31 ஆவது மாதம் (1888 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்) வந்தவுடன் அவர்கள் பொறுமையிழந்து, முன்னறிவிப்பு நிறைவேறவில்லை என்று முறைகேடாக அறிவித்தனர். (உண்மையில் அந்த உடன்படிக்கை ஒரு பிரசுரம் மூலம் வெளியிடப்பட்டதுமே அவர்கள் வெலவெலத்துப் போனார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட பதைபதப்பில் ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். அதில் வேதங்களைத் தவிர வேறு எந்த விதமான இறைவெளிப்பாட்டிலும் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சற்றும் பொருத்தமில்லாமல் அறிவித்தார்கள்.) ஆனால் 31 ஆவது மாத மத்தியில் மிர்ஸா நிஸாம் தீனின் மகளும், மிர்ஸா இமாம் தீனின் மருமகளுமான ஒரு பெண் தனது 25 ஆவது வயதில் ஒரு பச்சிளங்குழந்தையை விட்டு விட்டு மரணித்தபோது அவர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்து போனார்கள்; அவமானத்தால் தலை குனிந்தார்கள். இதன் மூலம் இறைவனின் வார்த்தை நிறைவேறியது. மக்கள் உள்ளம் பயத்தால் பீடிக்கப்பட்டது. அவர்கள் அதிசயித்துப் போனார்கள்.



சிலர் முன்னறிவிப்புகளைக் கேலி செய்வதில் கைதேர்ந்தவர்களாக இருக்கின்றனர். முன்னறிவிப்புகளைச் செய்வது இறைவெளிப்பாட்டிற்கான ஆதாரமோ, ஆன்மீக மேன்மைக்கு மட்டும் உரிய தனிப்பட்ட பண்போ அல்லவென்று அவர்கள் கருதுகின்றனர். அது ஒரு வகையான யூகமாகவோ, அறிவிப்பூர்வமான கணித ஆய்வின் வெளிப்பாடாகவோ இருக்கலாம் என்று கருதுகின்றனர். ஆனால் இந்த ஆட்சேபணைகள் எல்லாம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குப் பொருந்தாது. அவர்களின் முன்னறிவிப்புகள் எல்லாம் இறைவார்த்தைகளின் அடிப்படையில் செய்யப்பட்டவையாகும். அவர்கள் ஒரு கருவியாகவும், இறை வார்த்தைக்கு வாயாகவும் மட்டுமே பயன்பட்டார்கள். ஒரு மனிதன் என்ற வகையில் அவை அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டவையாக இருந்தன. சில நேரங்களில் அவற்றிற்கு விளக்கமளிப்பதில் அவர்கள் தவறு கூட இழைத்திருக்கிறார்கள்; அதனை ஒப்புக் கொள்ளவும் செய்திருக்கிறார்கள் என்ற உண்மையே அவர்கள் முற்காலத்தில் தோன்றிய உண்மையான இறைதூதர் என்பதற்கான சான்றாகும். ஆனால் அவர்கள் வெளியிட்ட ஏராளமான முன்னறிவிப்புகள் இறைவனின் வியத்தகு வழிகளில் நிறைவேறி இருக்கின்றன.

இராஜா தேஜா சிங் என்பவருக்கு அவரது சியால்கோட் நிலத்திற்குப் பதிலாக பட்டாலா தாலுகாவில் உள்ள நிலம்

*(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)*

# கஷ்டங்களும் சோதனைகளும்



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருமுறை சூஃபி பயாஸித் (ரஹ்) ஒரு சபையில் போதனை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது இறைநேசர்களின் ஒரு நீண்ட பரம்பரையில் தோன்றிய ஒருவரும் அந்த சபையில் இருந்தார். அவர் தமது உள்ளத்தில் பயாஸித் (ரஹ்) அவர்களைக் குறித்து காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தார். ஆனால் பழைய குடும்பங்களுக்குப் பதிலாக புதிய குடும்பங்களைத் தேர்ந்தெடுப்பது இறைவனின் வழிமுறையாகும். உதாரணமாக, பனீ இஸ்ராயீல் உலக இன்பங்களுக்கு இரையாகி இறைவனை மறந்தபோது அவர்களை விட்டு விட்டு இறைவன் பனீ இஸ்மாயீலைத் தேர்ந்தெடுத்தான்.

وَتِلْكَ الْأَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ இந்நாட்களை நாம் மக்களிடையே மாறி மாறி வரச் செய்கின்றோம். (திருக்குர்ஆன் 3:141)

எனவே இந்த மனிதரிடம் இந்த எண்ணம் தோன்றியது. “பயாஸித் கீழ் வகுப்பைச் சார்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவர். அவர் எப்படி இவ்வாறு அற்புதங்களையெல்லாம் செய்து இவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தை தம் பக்கம் இழுக்க முடிந்தது! நம்மிடம் இவ்வாறு மக்கள் கூட்டம் வருவதில்லையே!”

இந்த மனிதரின் எண்ணங்களை இறைவன் பயாஸித் (ரஹ்) அவர்களுக்கு தெரியப்படுத்தினான். எனவே அவர்கள் அந்த சபையில் ஒரு கதை கூற ஆரம்பித்தார்கள்.

ஒருமுறை ஒரு சபையில் இரவு நேரத்தில் ஒரு விளக்கு தண்ணீர் கலக்கப்பட்ட எண்ணெய் கொண்டு எரிந்து கொண்டிருந்தது. அப்போது எண்ணெய்யும் தண்ணீரும் சர்ச்சையில் ஈடுபட்டன. தண்ணீர் எண்ணெய்யை நோக்கி இவ்வாறு கூறியது. “நீ என்னை விட கனமாகவும் அழுக்காகவும் இருக்கின்றாய். ஆனால் அடர்த்தியாக இருக்கும் நீ எனக்கு மேலே மிதக்கின்றாய். நானோ தூயதாகவும் தெளிந்ததாகவும் இருக்கின்றேன். மேலும் தூய்மைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகிறேன். இருப்பினும் உனக்கு கீழே நான் இருக்கின்றேன். இது ஏன்?”



எண்ணெய் பதில் கூறியது: “நான் அனுபவித்த துன்பங்களில் சிறிதும் நீ அனுபவிக்கவில்லை. அதன் காரணமாகவே இந்த உயர்ந்த அந்தஸ்தை நான் பெற்றுள்ளேன். ஒரு காலத்தில் நான் பூமியில் விதைக்கப்பட்டிருந்தேன்; நான் மறைக்கப்பட்டிருந்தேன்; தாழ்மையுற்றிருந்தேன். பிறகு நான் இறைவனின் நாட்டப்படி வளர ஆரம்பித்தேன். முழுவதுமாக வளர்வதற்குள் நான் வெட்டப்பட்டேன். பிறகு பெரும் வேதனைகளுக்குப் பின்னர் நான் சுத்திகரிக்கப்பட்டேன். பிறகு செக்கில் வைத்து நான் அரைக்கப்பட்டேன். பிறகு நான் எண்ணெய்யாக ஆக்கப்பட்டு இறுதியில் எரியூட்டப்பட்டுள்ளேன். இவை அனைத்திற்குப் பிறகும் உயர்ந்த இடத்தைப் பெற்றுக் கொள்ள எனக்குத் தகுதி இல்லையா?”

மேற்கூறப்பட்ட உதாரணம் இறையடியார்கள் சோதனைகளையும் துன்பங்களையும் சகித்துக் கொண்ட பிறகே உயர் தகுதிகளைப் பெறுகின்றனர் என்பதை விளக்குகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 25-26)

# திருக்குர்ஆனின் வசனங்கள் நீக்கப்பட்டுள்ளனவா...?

(தஃப்ஸீரே கபீரிலிருந்து.....)




தமிழாக்கம்: மவ்லவி M. முஹம்மது சுல்தான் முஹீயுத்தீன்

مَا نَنْسَخْ مِنْ اٰيَةٍ اَوْ نُنْسِهَا نَاْتِ بِخَيْرٍ مِّنْهَآ اَوْ مِثْلِهَا ؕ
اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَیْءٍ قَدِيْرٌ



எந்தத் தூதுச் செய்தியினையும் நாம் நீக்கினால் அல்லது மறக்கடித்தால் அதை விடச் சிறந்ததை அல்லது அதுபோன்றதை (மீண்டும் உலகில்) நாம் கொண்டு வருகின்றோம். (தான் நாடுகின்ற) ஒவ்வொன்றின் மீதும் அல்லாஹ் முழுமையான ஆற்றல் பெற்றவனாவான் என்பது உமக்குத் தெரியாதா? (2:107)

திருக்குர்ஆனின் இந்த வசனம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மேலும் இந்த வசனத்தின் விளக்க உரைகள் எந்த அளவுக்கு உலக அளவில் இஸ்லாத்தின் நிலையை மேலும் திருக்குர்ஆனின் நம்பகத்தன்மையை பலவீனமாக ஆக்கி இருக்கின்றன என்றால் இந்த வசனத்தின் புரிதலால் திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்களை தனி மனித விருப்பத்திற்கு இணங்க சேர்க்கப்பட்டதாகவும் நீக்கப்பட்டதாகவும் ஆட்சேபனைகள் எழுகின்றன. இந்த வசனம் குறித்து ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த வசனம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது என்றால், என்னுடைய புரிதலில் இந்த வசனம் தொடர்பாக மக்களிடம் நிலவுகின்ற தவறான புரிதலை மட்டுமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விலக்கி இருந்தால் என்னைப் பொருத்தவரை இந்த ஒரு விஷயமே அன்னாரது நபித்துவம் மற்றும் இறைவன் புறமிருந்து வந்ததனை நிரூபிக்க போதுமானதாக இருந்திருக்கும். இந்த வசனம் தொடர்பாக முஸ்லிம்களிடம் உருவாகியுள்ள தவறான புரிதல்களுக்கிடையே இஸ்லாத்தை உண்மையான மார்க்கமாக நிரூபிப்பதும் அல்லது அதனை மன நிறைவு மற்றும் நிம்மதிக்குக் காரணமாகக் கருதுவது என்பதும் சாத்தியமற்றதாக இருந்தது. ஏனென்றால் இக்காலகட்டத்தில் முஸ்லிம்கள் இந்த வசனத்திற்கு, "நாம் திருக்குர்ஆனின் ஏதேனும் ஒரு வசனத்தை நீக்கினாலோ அல்லது அதனை மறக்கச் செய்தாலோ நாம் அதை விடச் சிறந்த அல்லது அதைப் போன்ற வேறு ஒரு வசனத்தைக் கொண்டு வருகிறோம்" என்பதையே அர்த்தமாகக் கூறி வந்தார்கள். இந்த வசனத்திற்கு இவ்வாறு பொருள் கொடுத்து அவர்கள் இதிலிருந்து திருக்குர்ஆனின் வசனங்கள் நீக்கப்பட்டதற்கான ஆதாரத்தைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் திருக்குர்ஆனின் சில வசனங்கள் நிச்சயமாக நீக்கப்பட்டு விட்டன என்றே கருதப்பட்டு வந்தது. மேலும் 'மன்ஸூஹ்' நீக்கப்பட்டு விட்டது என்பதற்கு அவர்கள் அவற்றின் கட்டளைகளை நீக்கப்பட்டு விட்டன என்று பொருள் கொள்கின்றனர். மேலும் சில வசனங்களைக் குறித்து அவர்கள் அவற்றை அல்லாஹ் மறக்கடித்து விட்டான் என்று கருதி வந்தனர். இந்த நீக்கப்படுதல் தொடர்பாக முஸ்லிம்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன.

அவர்களைப் பொருத்தவரை நீக்கப்படுதல் என்பதன் ஒரு வகை யாதெனில் வசனத்தின் பொருள் நிலைத்திருக்கிறது. ஆயினும் வார்த்தைகள் அழிக்கப்பட்டு விடுகின்றன. அதாவது ஒரு வசனம் பொருள் அளவில் திருக்குர்ஆனில் இருக்கும். ஆனால் அதன் வார்த்தை அதில் இருக்காது. அவர்கள் இதற்கு உதாரணமாக, திருக்குர்ஆனின் இந்த வசனம் முதலில் இருந்தது என்று இதனை எடுத்துரைக்கிறார்கள்.

الشيخ والشيخة اذا زنيا فارجوموهما نكالامن الله والله عزيز حكيم.

அதாவது ஒருவேளை வயோதிக ஆணும் வயோதிக பெண்ணும் விபச்சாரம் செய்தால் அவர்கள் இருவரையும் கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும். இது அல்லாஹ்விடமிருந்து தண்டனையாக உள்ளது. மேலும் அல்லாஹ் மிக்க கண்ணியத்திற்குரியவனும் மதிநுட்பம் மிக்கவனும் ஆவான். (ஃபத்ஹுல் பயான் பாகம் 1) ஆனால் பிறகு இந்த வசனம் நீக்கப்பட்டு விட்டது. ஆனால் அதன் கட்டளை எஞ்சி

இருக்கின்றது. மேலும் அதன்படி செயல்படுவது அவசியமாகும் என்று கருதுகிறார்கள்.

அவர்களது கருத்தின்படி திருக்குர்ஆனில் இருந்து நீக்கப்பட்ட இரண்டாவது வசனம் இதுவாகும்.

لو كان لابن ادم واديان من مال لا يبغى واديا ثالثا يملاء جوفه الا التراب

அதாவது ஒருவேளை இப்னு ஆதமிடம் செல்வங்கள் நிறைந்த இரண்டு பள்ளத்தாக்குகளும் இருந்தாலும் அவன் அதுபோன்று மூன்றாவது ஒரு பள்ளத்தாக்கும் கிடைத்து விட வேண்டும் என்று விரும்புகின்றான். மேலும் இப்னு ஆதமின் வயிற்றை மண்ணைத் தவிர வேறு எந்தப் பொருளும் நிரப்ப முடியாது. (ஃபத்ஹுல் பயான் பாகம் 1)

நீக்கப்படுதலின் இரண்டாவது வகையாக அவர்கள் கூறுவதாவது, வசனத்தின் வார்த்தைகள் நிலைத்திருக்கின்றன. ஆனால் அதனுடைய கட்டளை நீக்கப்பட்டு விட்டது. அவர்கள் இதற்கு ஆதாரமாக لَآ اِكۡرَاهَ فِى الدِّيۡنِ மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை (2:257) என்ற வசனத்தை எடுத்து வைக்கிறார்கள். இந்த வசனத்தின் கட்டளை அவர்களைப் பொருத்தவரை நீக்கப்பட்டு விட்டது. ஆனால் வார்த்தைகள் நிலைபெற்றிருப்பதாகக் கருதுகிறார்கள். இந்த வசனத்தை ஜிஹாது குறித்த வசனங்கள் நீக்கி விட்டன என்று அவர்கள் கூறுகிறார்கள். மேலும் தற்போது நிராகரிப்பாளர்களைத் தேடித் தேடி அவர்களை அடித்துத் துன்புறுத்தி இஸ்லாத்தில் நுழையச் செய்வது ஆகுமானது என்றும் கூறுகிறார்கள்.

இதற்கான இரண்டாவது உதாரணமாக அவர்கள் கூறுவதாவது, அல்லாஹ் கூறுகின்றான்:

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡۤا اِذَا نَاجَيۡتُمُ الرَّسُوۡلَ فَقَدِّمُوۡا بَيۡنَ يَدَىۡ نَجۡوٰٮكُمۡ صَدَقَةً ؕ
ذٰلِكَ خَيۡرٌ لَّكُمۡ وَاَطۡهَرُ ؕ فَاِنۡ لَّمۡ تَجِدُوۡا فَاِنَّ اللّٰهَ غَفُوۡرٌ رَّحِيۡمٌ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் தூதரிடம் தனிமையில் ஆலோசனை செய்யும்போது அந்த ஆலோசனைக்கு முன்னர் எதனையாவது தானம் வழங்குங்கள். அது உங்களுக்கு மிகச் சிறந்ததும் மிக்க தூய்மையானதுமாகும். ஆனால் நீங்கள் (வழங்குவதற்கு எதனையும்) பெறவில்லையாயின் (அதற்காக நீங்கள் அஞ்ச வேண்டாம்). நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (58:13)

இவர்களைப் பொருத்தவரை இந்த வசனத்தின் கட்டளையை அடுத்த வசனம் நீக்கி விட்டது.

ءَاَشۡفَقۡتُمۡ اَنۡ تُقَدِّمُوۡا بَيۡنَ يَدَىۡ نَجۡوٰٮكُمۡ صَدَقٰتٍ ؕ
فَاِذۡ لَمۡ تَفۡعَلُوۡا وَ تَابَ اللّٰهُ عَلَيۡكُمۡ فَاَقِيۡمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ
وَاَطِيۡعُوا اللّٰهَ وَرَسُوۡلَهٗ ؕ وَاللّٰهُ خَبِيۡرٌۢ بِمَا تَعۡمَلُوۡنَ ع

ஆலோசனை செய்வதற்கு முன்னர், தானதருமம் வழங்குவது பற்றி நீங்கள் பயந்து விட்டீர்களா? நீங்கள் அவ்வாறு செய்யாமலே அல்லாஹ் உங்களுக்கு அருள் செய்துள்ளான். எனவே நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். மேலும் நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிபவனாவான். (58:14)

நீக்கப்படுதலின் மூன்றாவது வகை யாதெனில் அதில் அவர்களைப் பொருத்தவரை வசனத்தின் வார்த்தைகள் மற்றும் அர்த்தங்கள் ஆகிய இரண்டும் நீக்கப்பட்டு விட்டன. இதற்கு உதாரணமாக, அவர்கள் கிப்லா மாற்றப்பட்ட கட்டளையை எடுத்துரைக்கிறார்கள். முதலில் முஸ்லிம்கள் பைத்துல் முகத்தஸை நோக்கி முகம் திருப்பி தொழுது கொண்டு இருந்தார்கள். ஆனால் தற்போது அதனை நோக்கி முகம் திருப்புவது ஆகுமானது அல்ல என்பது அவர்களது கருத்தாகும். இத்தனைக்கும் இதற்கான கட்டளையும் இருக்கவில்லை. அவ்வாறே செயல்ரீதியாக தற்போது முஸ்லிம்கள் அதனை நோக்கி முகம் திருப்பித் தொழுவதும் கிடையாது.

இவ்வாறாக அவர்கள் நீக்கப்பட்ட வசனங்களின் இந்த மூன்று வகைகளைக் கூறுகிறார்கள். மேலும் நாஸிஹ் தொடர்பாக




அவர்கள் கூறுவதாவது, இதன் பொருள் யாதெனில் அந்தப் பகுதி சிந்தனையிலிருந்து மறைந்து விடுகின்றது. இதற்கு உதாரணமாக அவர்கள் கூறுகிறார்கள். இரண்டு சஹாபிகள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஓர் அதிகாரத்தை கற்றுக் கொண்டார்கள். பிறகு அவர்கள் இருவரும் ஓரிரவு அதனை ஓதலாயினர். ஆனால் அதன் ஒரு வார்த்தை கூட அவர்கள் இருவருக்கும் நினைவில் இருக்கவில்லை. பொழுது புலர்ந்ததும் அவர்கள் இருவரும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் சென்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே! அந்த அதிகாரம் எங்களது சிந்தனையிலிருந்து மறைந்து விட்டது என்று முறையீடு செய்தார்கள்.

அன்னார் கூறினார்கள்: انها نسخ ونسي (இன்னஹா நுஸிஹ வ நுஸிய) அதாவது இந்த அதிகாரமும் நீக்கப்பட வேண்டிய வசனங்களுள் இருந்தது. அது இறைவன் தரப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. மேலும் அது மறக்கடிக்கப்பட்டு விட்டது. இதே கருத்தை ஓர் அறிவிப்பில் இமாம் குர்தபியும் எழுதியுள்ளார்.

சிலர் நுன்ஸிஹா என்பதற்குப் பதிலாக நன்ஸாஹா என்று படிக்கிறார்கள். அவர்களைப் பொருத்தவரை இதன் பொருள் மறக்கடிக்கப்படுவது அல்ல. மாறாக நாம் அதனை விட்டு விடுகிறோம் என்பதாகும். மேலும் அதன் பொருளை நாம் திருக்குர்ஆனிலேயே விட்டு விடுகிறோம்; மாற்றவில்லை என்பதாகும்.

சிலர் அதனை நுன்ஸாஹா என்றே வைத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு நுன்ஸிஹாவின் பொருளைத் தருகிறார்கள். அது நாங்கள் அதனை மறையச் செய்தோம் அல்லது சிந்தனையிலிருந்து அழித்து விடுகிறோம் என்பதாகும். இவ்வாறாக அவர்கள் இதற்கு மறந்து விடுதல் என்று பொருள் கொள்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு மனிதனும் நீக்கப்படுதல் எனும் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட பிறகு திருக்குர்ஆனின் மீது எவ்வித நம்பிக்கையும் எஞ்சி இருக்காது என்பதை சாதாரணமாக சிந்தித்தாலே புரிந்து கொள்ள முடியும். ஒருவேளை எவரேனும் இறைவன் இந்த வசனத்தின் கட்டளையை நீக்கி விட்டு அதனை திருக்குர்ஆனிலிருந்து நீக்கி விட்டான் என்று கூறினால் அது திருக்குர்ஆன் பற்றி குறைந்தபட்ச சந்தேகத்தை உருவாக்குவதாக இருக்காது. எந்த வசனங்களை இறைவன் மாற்ற வேண்டி இருந்ததோ அது திருக்குர்ஆனில் இடம் பெற்றிருக்காது. அதற்குப் பகரமாக நிரந்தரமாக வழங்க வேண்டிய கட்டளை மட்டுமே இடம்பெற்றிருக்கும். இது பெரிய விஷயம் ஒன்றும் இல்லை. ஆனால் ஒருவேளை அதற்குப் பதிலாக ஏதேனும் நிரந்தர கட்டளை கொண்டு வர வேண்டியது இல்லாதிருந்தால் நீக்கப்பட்ட வசனங்களைத் திருக்குர்ஆனில் வைப்பதற்கு என்ன அவசியம் நேர்ந்தது? சில குறிப்பிட்ட காலத்திற்கான கட்டளைகள் நீக்கப்பட்டும் இருக்கின்றன என்பது சந்தேகமின்றி சரியானதே ஆகும். உதாரணமாக, இப்ராஹீமின் வேதத்தை மூஸாவின் வேதம் நீக்கி விட்டது. மேலும் மூஸாவின் வேதத்தை திருக்குர்ஆன் நீக்கி விட்டது. ஆகவே இறைவனது கட்டளைகள் நீக்கப்படுவது என்பது ஆச்சரியப்படத்தக்க விஷயம் அல்ல. ஆயினும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒரு நிலைத்திருக்கும் ஷரீஅத்தாகிய திருக்குர்ஆனைப் பற்றி இவ்வாறு கூறுவது, அதாவது திருக்குர்ஆனில் சில வசனங்கள் குறிப்பிடப்பட்டு பிறகு அவை நீக்கப்பட்டு விட்டது எனக் கூறுவதே பிழையாக தென்படும் விஷயம் ஆகும். பிறகு ஒருவேளை அவை நீக்கப்பட்டு விட்டாலும் கூட அத்துணை அபாயகரமான விஷயமாக இருந்திருக்காது. ஆனால் திருக்குர்ஆனின் சில வசனங்கள் நீக்கி விட்டுள்ளன. ஆயினும் அவற்றின் வார்த்தைகள் திருக்குர்ஆனில் இடம்பெற்றிருக்கின்றன. மேலும் அதனை நிரூபிக்க எந்தவோர் இறை வஹீயும் எடுத்து வைக்க முடியவில்லை. மாறாக தங்களது யூகத்தையே முன் வைத்துள்ளார்கள் என்று எவரேனும் கூறுவாரேயெனில் இதனால் மிகப்பெரும் ஆபத்து உருவாகி விடுகிறது. மேலும் திருக்குர்ஆன் மீது எவ்வித நம்பிக்கையும் இருக்காது.




மனித மூளையின் பல படித்தரங்கள் இருக்கின்றன. சில விஷயங்களை ஒரு மூளை புரிந்து கொள்கிறது. மேலும் மற்றொன்று புரிந்து கொள்வதில்லை. ஒருவேளை திருக்குர்ஆனின் எந்த வசனம் செயல்படத்தக்கது. மேலும் எந்த வசனம் நீக்கப்பட்டது என்று தீர்மானிக்க மனித சிந்தனையை அணுகினால் ஒரு வகையில் திருக்குர்ஆன் முழுவதுமே நீக்கப்பட்டதாகி விடும். ஏனென்றால் ஒரு பகுதியை ஒரு மூளை புரிந்து கொள்ளவில்லை என்றால் வேறு பகுதியை மற்றொன்று புரிந்து கொள்ளாது. இதன் காரணத்தினால் தான் திருக்குர்ஆனின் ஐந்து வசனங்களில் இருந்து 1100 வசனங்கள் வரை நீக்கப்பட்டதாக ஆக்கப்பட்டிருக் –கின்றது. இவ்வாறாக எவருக்கு ஐந்து வசனங்கள் புலப்படவில்லையோ அவர் ஐந்து வசனங்களை நீக்கப்பட்டதாக்கி விட்டார். எவருக்கு நூறு வசனங்கள் புரியவில்லையோ அவர் நூறு வசனங்களை நீக்கப்பட்டதாக்கி விட்டார். எவரால் ஆயிரம் வசனங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லையோ அவர் ஆயிரம் வசனங்களை நீக்கப்பட்டதாக்கி விட்டார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்துதான் திருக்குர்ஆனின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை அனைத்து வசனங்களும் செயல்படுவதற்கு ஏற்றவை. பிஸ்மில்லாஹ்வின் 'பா' –விலிருந்து அந்நாஸின் 'ஸீன்' வரை திருக்குர்ஆன் நிலைபெற்று இருக்கின்றது. மேலும் மறுமை வரை செயல்படுவதற்கு ஏற்றதாக இருக்கின்றது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: அன்னாரது இந்த வார்த்தைகள் எனக்கு நன்கு நினைவில் இருக்கின்றது. அதாவது திருக்குர்ஆனுக்குள் நீக்கப்பட்ட வசனங்களும் இருக்கின்றன என்று நம்புகிற மனிதன்




அந்த திருக்குர்ஆனை கவனத்துடன் ஓத, அது பற்றி சிந்திக்க, மேலும் அதன் கட்டளைகளின்படி செயல்பட முயற்சி செய்ய அவனுக்கு என்ன அவசியம் நேர்ந்தது? இந்தத் திருக்குர்ஆனில் நீக்கப்பட்ட வசனங்களும் இருக்கின்றன எனும்போது நான் இதனை ஆராய்ந்து எனது நேரத்தை ஏன் வீணாக்க வேண்டும்? நான் எந்த வசனத்தை கவனமாக ஓதினேனோ அது நீக்கப்பட்டது என்று எனக்கு பிறகு தெரிய வர சாத்தியம் இருக்கின்றதே என்று அவன் கூறுவான்.

ஆனால் இந்த வேதம் முழுவதும் நீக்கப்படாத வசனங்கள் அடங்கியதாகும். மேலும் அதன் ஒவ்வொரு புள்ளியும் செயல்படத்தக்கவை ஆகும் என்று கூறும் மனிதர்அதனைப் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்வார். மேலும் திருக்குர்ஆன் இவ்வாறாக அவரது இறை ஞானத்தில் முன்னேற்றம் காண காரணமாக அமைந்து விடும். அல்லாஹ் மனிதர்களில் பெரும் ஞானம் கொண்டவர்களையும் படைத்திருக்கின்றான். ஆனால் எவராலும், நான் திருக்குர்ஆனின் ஞானம் முழுவதையும் பெற்றிருக்கின்றேன் என்று கூற முடியாது. அல்லாஹ் என் மீது திருக்குர்ஆனின் எண்ணற்ற ஞானங்களைத் திறந்துள்ளான். நானும் கூட திருக்குர்ஆனின் ஞானம் முழுவதையும் பெற்றிருக்கிறேன் என்று கூற முடியாது. ஒருவேளை எவரேனும் அதன் அனைத்து ஞானங்களையும் புரிந்து விட்டார் என்றிருந்தால் மறுமை வந்து விடும். ஏனென்றால் திருக்குர்ஆன் மறுமை வரையிலானதாகும். மேலும் அதற்குப் பிறகு வேறு எந்த வேதமும் இல்லை. எப்போது அதில் புதிய புதிய விஷயங்கள் வெளிப்படுவது முற்றுப்பெற்று விடுமோ அப்போது கியாமத் மறுமை வந்துவிடும். ஆகவே இதன் ஞானம் ஒருபோதும் முற்றுப் பெற முடியாது. மேலும் இந்த வேதமானது புதிய புதிய அர்த்தங்களை உலகில் வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும். ஒருவேளை விரிவுரையாளர்கள் இதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் குறைந்தபட்சம் எந்தவோர் அறிவும் ஏற்றுக் கொள்ள முடியாத வகையிலான விஷயங்களைத் திருக்குர்ஆன் தொடர்புடையதாக எடுத்துரைக்கவும் கூடாது. நான் விரிவுரைகளைப் பார்க்கும்போது அவற்றில் நீக்கப்பட்ட வசனங்கள் தொடர்பான வாதங்களைப் படிக்கும்போது எனக்கு ஒரு வசனம் கூட நீக்கப்பட்டதாக தென்படுவதில்லை. மேலும் பிறகு அதிலும் மிகப்பெரிய விஷயம் யாதெனில், வசனங்கள் நீக்கப்பட்டதாக ஒப்புக்கொண்டால் திருக்குர்ஆனின் இருப்பே வீணானதாக ஆகிவிடும். என்னைப் பொருத்தவரை இந்த வசனத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற பொருளானது திருக்குர்ஆனின் அடிப்படையில் முற்றிலும் தவறானதாகும். அல்லாஹ் தெளிவான வார்த்தைகளில் பிரிதோரிடத்தில் கூறுகின்றான்:

سَنُقْرِئُكَ فَلَا تَنْسَىٰٓ நாம் உமக்கு(க் குர்ஆனை)க் கற்பிப்போம்; நீர் (அதனை) மறக்க மாட்டீர். (87:7)

ஒருவேளை நுன்ஸிஹா (மறக்கடித்தால்) என்ற வார்த்தை திருக்குர்ஆனை குறிப்பதாகும் என்றால், سَنُقْرِئُكَ فَلَا تَنْسَىٰٓ என்பதும் திருக்குர்ஆனுக்காகவே எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இப்போது அம்மக்கள் கூறுகின்ற பொருளைக் கருத்தில் கொண்டால் இவ்விரண்டில் ஒரு வசனம் நிச்சயமாக நீக்கப்பட்டதாகிவிடும். ஒருவேளை இரண்டாவது வசனத்தை நீக்கப்பட்டதாகக் கருதினால் திருக்குர்ஆன் எப்போதும் மறந்து கொண்டே இருக்கும். அது உமக்கு ஒருபோதும் நினைவில் இருக்காது என்று பொருள்படும். இந்த அர்த்தத்தை எவரும் ஏற்றுக் கொள்வதில்லை. அல்லாஹ்வின் செயல்களும் வினோதமானவை ஆகும். அவனும் இவ்வாறு திட்டம் தீட்டி இருக்கின்றான். فَلَا تَنْسَىٰٓ எனும் வசனத்தை நீக்கப்பட்டதாகக் கூற எவருக்கும் எண்ணம் வரவில்லை. ஒருவேளை திருக்குர்ஆனில் ஏதேனும் வசனம் நீக்கப்பட வேண்டும் என்றிருந்தால் முதன் முதலில் இந்த வசனம் நீக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் இதனை நீக்கப்பட்டதாகக் கூறவில்லை.

(தொடரும்...)

# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




**தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்**

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் உத்தரவிற்கிணங்க அஹ்மதி குழந்தைகளின் மார்க்க அறிவை மேம்படுத்தும் நோக்கத்தில் ஜனாப் ரீத் அஹ்மத் சௌத்ரி சாஹிப் அவாகளால் A BOOK OF RELIGIOUS KNOWLEDGE என்ற தலைப்பில் எழுதப் பெற்ற இந்நூல் 1977-ம் ஆண்டு ஆகஸ்டு 3 -ஆம் தேதி வெளியிடப்பட்டதாகும். அந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இங்கு தரப்படுகிறது.

இந்த மார்க்கக் கல்வி ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. இஸ்லாம் (73 கேள்விகள்)
2. திருக்குர்ஆன் (25 கேள்விகள்)
3. இஸ்லாமிய வரலாறு (91 கேள்விகள்)
4. அஹ்மதிய்யத் (147 கேள்விகள்)
5. ஒப்பீட்டு மார்க்கக் கல்வி (38 கேள்விகள்)

## 1. இஸ்லாம்

1. ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்)அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தின் பெயர் என்ன?

இஸ்லாம்.

2. 'இஸ்லாம்' என்னும் சொல்லின் பொருள் என்ன?

'இஸ்லாம்' என்னும் அரபிச் சொல்லுக்கு 'சமாதான நிலை' என்று பொருள். இதற்கு 'கீழ்ப்படிதல்', 'சரணடைதல்' என்ற பொருட்களும் உண்டு.

3. இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுவோரை எவ்வாறு அழைக்கிறோம்?

'முஸ்லிம்' என்று அழைக்கிறோம்.

4. இந்த மார்க்கத்திற்கு 'இஸ்லாம்' என்று பெயரிட்டது யார்?

அல்லாஹ் இந்த மார்க்கத்திற்கு 'இஸ்லாம்' என்று பெயர் வைத்தான். (அல் குர்ஆன் 5:4).

5. 'ஈமான்' என்றால் என்ன?

'ஈமான்' என்பதன் பொருள் 'நம்பிக்கை' (உண்மை என ஒப்புக்கொள்ளுதல்) அல்லது 'விசுவாசம்' (பற்றுறுதியுடன் நம்பிக்கைக்கு மாறு செய்யாதிருத்தல்) என்பதாகும்.

6. 'நபி' என்பவர் யார்?

மனிதகுலத்திற்கு வழி காட்டவும் மனிதகுலத்தைச் சீர்திருத்தவும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்படும் மனிதரே 'நபி' ஆவார்.




7. நபிமார்களின் தலைவர் யார்?

ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நபிமார்களின் தலைவர் ஆவார்கள்.

8. 'மலக்குகள்' என்பவர் யாவர்?

'மலக்குகள்' என்பவர்கள் ஆத்மீகமான படைப்புகள் ஆவர். இவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படி -பவர்கள். அல்லாஹ் இவர்களில் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட பணிகளை வழங்கியுள்ளான்.

9. மலக்குகள் சிலரின் பெயரைக் கூறுக:

ஜிப்ரீல், மிக்காயீல், இஸ்ராயீல் மற்றும் இஸ்ரா∴பீல் ஆகியோர் மலக்குகளில் சிலர் ஆவர்.

10. ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு இறைவெளிப்பாட்டை (வஹீ) கொண்டு வந்த மலக்கு யார்?

ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை).

11. உயிர்த்தெழும் நாளைப் பற்றியும் நியாயத் தீர்ப்பு நாளைப் பற்றியும் நீவிர் அறிவது யாது?

உயிர்த்தெழும் நாளில் எல்லா மனிதர்களும் மீண்டும் எழுப்பப்பட்டு ஒரு புதிய வாழ்க்கை அளிக்கப்படுவார்கள். பின்னர் அவர்களின் செயலுக்கேற்ப இறைவன் தீர்ப்பு வழங்குவான். நற்செயல்கள் செய்தவர்கள் சொர்க்கத்திற்கும், வாழ்க்கையைத் தீய வழிகளில் செலவிட்டவர்கள் நரகத்திற்கும் செல்வர்.

12 ஒரு மனிதர் சொர்க்கத்திலோ, நரகத்திலோ, எவ்வளவு காலம் தங்குவார்?

சொர்க்கம் என்றும் நிரந்தரமானது. ஆனால் நரகம் ஒரு தற்காலிகத் தங்குமிடமாகும். மனிதர்கள் தமது ஆத்மீக நோய் குணமாகும் வரை ஒரு குறிப்பிட்ட காலம் அங்கே தங்குவார்கள்.

13. ‘பாவம்’ என்றால் என்ன?

இறைவனின் கட்டளைக்கு எவ்விதத்திலேனும் கீழ்படியாமல் இருத்தலே பாவமாகும்.

14. மனிதன் பாவத்துடனே பிறக்கிறானா?

இல்லை. ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் பாவமற்றவனாகவே பிறக்கிறான்.

15. அல்லாஹ்வின் தூதர்கள் பாவம் செய்கிறார்களா?

நிச்சயமாக இல்லை. அவர்கள் பாவமற்றவர்கள்.

16. இறைத் தூதர்களில் எவரேனும் தமக்கு இறைத்தன்மை இருப்பதாகக் கூறியுள்ளார்களா?

இல்லை. எந்த ஒரு இறைத்தூதரும் தமக்கு தெய்வத் தன்மை இருப்பதாகக் கூறவில்லை. இறைவனின் அடியார்களாகவும் விளங்கும் அவர்களும் மனிதர்களே.

17. அருளப் பெற்ற புத்தகங்கள் சிலவற்றைக் கூறுக:

ஸபூர், தவ்ராத், இன்ஜீல், குர்ஆன்.

18. ஈமானின் முக்கியப் பிரிவுகள் யாவை?

இஸ்லாமிய நம்பிக்கையின் முக்கியப் பிரிவுகள் பின் வருமாறு:

1. இறைவனின் ஏகத்துவத்தின் மீது நம்பிக்கை கொள்ளுதல்
2. அவனது மலக்குகள் மீது நம்பிக்கை கொள்ளுதல்
3. அவனது எல்லா வேதங்களையும் நம்புதல்
4. அவனது எல்லா தூதர்களையும்
5. உயித்தெழும் நாளை நம்புதல்.

19. இஸ்லாத்தின் ஐந்து தூண்கள் யாவை?

இஸ்லாத்தின் ஐந்து தூண்களாவன:

1. கலிமா: “வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ் உடைய தூதர் என்றும் உறுதியாக நம்புதல்.
2. தொழுகை: ஐந்துவேளைத் தொழுகைகளையும் குறித்த நேரத்தில் நிறைவேற்றுதல்.
3. ஸக்காத்: தமது சொத்தின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை எளியோருக்காக வழங்குதல்.
4. நோன்பு: ரமலான் மாதம் முழுவதும் தினமும் நோன்பிருத்தல்.
5. உடல் ஆரோக்கியமும் பொருளாதார வசதியும் இருந்து பயணப் பாதுகாப்பும் இருப்பவர்கள் வாழ்வில் ஒருமுறையேனும் மக்காவிற்குப் புனித யாத்திரை செல்லுதல் ஆகியவையாகும்.

20. இஸ்லாம் கட்டாயமாக்கியுள்ள தொழுகைகள் யாவை?

ஐந்து கட்டாயத் தொழுகைகள் உள்ளன. அவை ஃபஜ்ர், ளுஹர், அஸ்ர், மக்ரிப், இஷா ஆகியனவாகும்.

21. தொழுகைக்குரிய நேரங்கள் யாவை?

ஃபஜ்ர் - அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன்

ளுஹர் - முற்பகலின் ஆரம்பத்தில்

அஸ்ர் - பிற்பகலின் பிற்பகுதியில்

மக்ரிப் - சூரிய அஸ்தமனம் முடிந்தவுடன்

இஷா - நடு இரவு வருமுன்

22. இஸ்லாத்தில் எத்தனை வகையான தொழுகைகள் உள்ளன?

முக்கியமாக மூன்று வகையான தொழுகைகள் உள்ளன. (1) ஃபர்ளு தொழுகை - இவை அல்லாஹ்வால் நிர்ணயிக்கப்பட்டவை. (2) ஸுன்னத் - இவை பெருமானார் (ஸல்) அவர்களால் ஃபர்ளு தொழுகைகளுடன் தவறாமல் ஒழுங்காகத் தொழுது வரப்பெற்ற தொழுகைகளாகும். (3) நஃபில் - இவை சில குறிப்பிட்ட நேரங்களில் எப்போது ஒருவர் விரும்பினாலும் தொழக்கூடிய விருப்பத் தொழுகைகளாகும்.

23. தொழக் கூடாத நேரங்கள் யாவை?

பின்வரும் நேரங்களில் தொழுகை தடை செய்யப் -பட்டுள்ளது:

1) சூரியன் உதயமாகிக் கொண்டிருக்கும்போது
2) சூரியன் நடுவானில் இருக்கும்போது
3) அஸ்ர் தொழுகைக்குப் பின் சூரிய அஸ்தமனம் வரை
4) சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருக்கும்போது
5) ஃபஜ்ர் தொழுகைக்குப் பின் சூரிய உதயம் வரை

24. கூட்டுத் தொழுகை நடத்துவோரை எவ்வாறு அழைக்கிறோம்?

‘இமாம்’ என்று அழைக்கிறோம்.

25. எந்தத் தொழுகைகளைக் கூட்டாகத் தொழ வேண்டும்?

1) ஐந்து நேரத் தொழுகைகள்
2) வெள்ளிக்கிழமை கடமையாக்கப்பட்ட (ஜுமுஆ) தொழுகை
3) ‘ஈத்‘’ தொழுகைகள் (இருபெருநாள் தொழுகைகள்) ஒவ்வொருவருடமும் இரு பெருநாள் தொழுகைகள் வருகின்றன.
4) தராவீஹ் தொழுகை - இவை ரமலான் மாதத்தில் தொழுப் -படுகின்றன.
5) ஜனாஸாத் தொழுகை
6) சூரிய சந்திர கிரகணத்தின்போது தொழப்படும் ‘ஸலாத்துல் குஸூஃப்’எனப்படும் கிரகணத் தொழுகை.
7) ‘ஸலாத்துல் இஸ்திகா’ எனப்படும் மழைத் தொழுகை.

(தொடரும்)



வக்ஃபே நவ்
உடன்
சந்திப்பு
நிகழ்ச்சி

கேள்வி மற்றும் பதில்

# இரண்டும் வேண்டுமா? ஒன்று மட்டும் போதுமா?

வக்.்.பே நவ் மாணவரின் கேள்வி: எனது பல கடிதங்களுக்கு ஹுஸூர் அவர்கள் அனுப்பிய பதில் கடிதங்களில் வெற்றிக்கான திறவுகோல் குறித்த நேரத்தில் தொழுவதும் திருக்குர்ஆன் திலாவத் செய்வதுமாகும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படியானால், டெஸ்லாகார் கம்பெனியின் நிறுவனர் ஏலன் மஸ்க் மற்றும் அமேசான் கம்பெனியின் நிறுவனர் ஜெ.்.ப் பெஸாஸ் போன்றவர்கள் தொழுவதுமில்லை, இறைவனை நினைவு கூர்வதுமில்லை. ஆனால் அவர்கள் வெற்றி பெற்றவர்களாகவும் செல்வம் படைத்தவர்களாகவும் இருக்கின்றனரே?

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் பதில்: உங்களது வாழ்வின் நோக்கம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?

மாணவர்: அல்லாஹ்வை வணங்குவது

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள்: சரிதான், எனது சமீபத்தைய ஜுமுஆ உரையிலும் நான் இதனைப் பற்றிக் கூறியிருந்தேன். (நீங்கள் குறிப்பிடும்) அவர்களின் அல்லது உலகவாதிகளின் வாழ்க்கையின் நோக்கம் என்ன?

மாணவர்: உலகசெல்வங்களைப் பெறுவது

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள்: அல்லாஹ் ஆதமைப் படைத்தபோது ஷைத்தான் அல்லாஹ்வுக்கும் அல்லாஹ்வின் கட்டளைப்படி ஆதமுக்கும் சிரம் பணிய மறுத்தான். அதற்கு என்ன காரணம்? அதற்கு அகம்பாவம் மற்றும் உலக விருப்பங்களே காரணமாகும். அவன் அல்லாஹ்விடம் சவால் விடுத்தான். அதாவது பெரும்பாலானவர்கள் என்னைப் பின்பற்றுவார்கள். நான் அவர்களை நேர்வழியினை விட்டும் விலக்கி வழிகேட்டில் நடத்திச் செல்வேன். அல்லாஹ் அதற்கு அவனிடம் உன்னால் இதனைச் செய்ய முடியாது என்று கூறவில்லை. மாறாக, கூறினான்: ஆம், சிலர் இருப்பார்கள்; நல்லடியார்கள்; அவர்கள் எனது கட்டளைகளின்படி நடப்பார்கள்.. அவர்கள் எனது நபிமார்களை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருந்தாலும் அவர்களே இறுதியில் வெற்றி பெறுவார்கள்.

ஏனெனில், உங்களது நோக்கம் உலக விருப்பங்களை அல்ல, உங்களது நோக்கம் அல்லாஹ்வின் நேசத்தைப் பெற்றுக் கொள்வதாகும். ஓர் இறையச்சமுடையவர் எப்போதும் மறுமை வாழ்வில் அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்காக முயல்வார். இறையச்சமுடையவர் மறுமையில் நற்கூலியைப் பெறுவார். இந்த உலக விரும்பிகள் இந்த வாழ்வில்தான் நற்கூலி பெறுவர். எனவேதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்களது வலது கண் குருடாக இருக்கும். அதாவது அவர்களின் மார்க்கம், மார்க்க அறிவு என்ற கண் குருடாக இருக்கும். ஆனால் இடது கண் பிரகாசமாக இருக்கும். அதாவது அவர்கள் உலக விஷயங்களில் முன்னேறியிருப்பர். எனவே உங்களது நோக்கம் உலக ஆதாயங்களைப் பெறுவது மட்டும்தான் என்றால் நீங்கள் தாராளமாக தொழுகையை விட்டு விடலாம். இஸ்லாத்தை விட்டு விடலாம். நீங்கள் விரும்புவதைச் செய்து கொள்ளலாம். ஆனால் நீங்கள் மரணத்திற்குப் பின்னர் ஒரு வாழ்வு இருக்கிறது என்றும், அது நிரந்தரமானது என்றும் நம்பினால் அப்போது அல்லாஹ்வின் நேசத்தை இவ்வுலகிலும் மறுவுலகிலும் பெற்றுக் கொள்வீர்கள். நீங்கள் பள்ளிக்கூடம் செல்கிறீர்களா?



மாணவர்: ஆம் ஹுஸூர்

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள்: நீங்கள் நன்றாகப் படிக்கின்றீர்களா?

மாணவர்: ஆம் ஹுஸூர்

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள்: உங்களுக்கு அடிப்படை உலகத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் ஏதேனும் சிரமம் இருக்கிறதா?

மாணவர்: இல்லை ஹுஸூர்

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள்: உங்களுக்கு அன்றாட உணவு, காலை உணவு, மதிய உணவு, மாலை உணவு எல்லாம் கிடைக்கிறது. நீங்கள் நல்ல உடை அணிந்துள்ளீர்கள். எனவே உங்களுக்கு உலகிற்குத் தேவையான எல்லாம் கிடைக்கிறது. அத்துடன் நீங்கள் அல்லாஹ்விடம் துஆவும் செய்கிறீர்கள். மேலும் உங்களது குறிக்கோள் என்ன? எதிர்காலத்தில் நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?

மாணவர்: இதய அறுவைச் சிகிச்சை நிபுணர்

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள்: நீங்கள் உங்களது குறிக்கோளை அடைந்து விட்டால் நீங்கள் இவ்வுலக நன்மையையும் பெற்றுக் கொள்வீர்கள். அத்துடன் நீங்கள் இறைவன் முன் குனிந்தால், ஐவேளைத் தொழுது வந்தால், அல்லாஹ்வின் கட்டளைப்படி நடந்து வந்தால் நீங்கள் மறுஉலகநன்மையையும் பெற்றுக் கொள்வீர்கள். ஆனால் இந்த உலகவாதிகள் அதனை ஒருபோதும் பெறமாட்டார்கள். எனவே நீங்கள் எடுக்கின்ற முடிவுதான். நீங்கள் இரண்டு நன்மைகளையும் பெறவிரும்புவீர்களா? அல்லது ஒரே ஒரு நன்மையைத்தான் விரும்புவீர்களா? எதை விரும்புவீர்கள்? ஒன்றையா அல்லது இரண்டையா?

மாணவர்: இரண்டையும் ஹுஸூர்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள்: ஒரே ஒரு நன்மையை உலக நன்மையை மட்டுமே பெறுகின்றனர். ஆனால் நமக்கு அல்லாஹ் இவ்வுலக மற்றும் மறுஉலக வாழ்வின் நன்மைகளை வாக்களித்துள்ளான். பாருங்கள், நம்முடைய வாழ்வின் நோக்கம் இவ்வுலகம் அல்ல. ஒரு நம்பிக்கை கொண்டவரின் நோக்கம் அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதாகும். அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்கு நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். உங்களின் ஆன்மீக நிலைமைகளை உயர்த்திக் கொள்வதற்கும் மனிதகுலத்திற்குத் தொண்டு செய்வதற்கும் நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

(வக்ஃபே நவ் உடன் சந்திப்பு நிகழ்ச்சி, டல்லாஸ், டெக்ஸாஸ், அமெரிக்கா. நாள்: 05.10.2022)

---

*(14-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

வாங்கப்பட்டது. அவர் இறந்து விட்டதாக 1862 அல்லது 1863 ஆம் ஆண்டு வாக்கில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஓர் ஆன்மீகக் காட்சியில் கண்டார்கள். இதனை அவர்கள் சியால்கோட் நீதிமன்றத்தில் பணியாற்றிய தமது நண்பரான L. பீம் ஸெய்ன் என்பவருக்குத் தெரிவித்தார்கள். அதே நாள் பிற்பகல் 2.00 மணிக்கு அமிர்தசரஸின் கமிஷனர் சற்றும் எதிர்பாராத விதமாக சியால்கோட்டுக்கு வந்தார். அவர் அங்கிருந்த துணை கமிஷனரிடம் ராஜா தேஜா சிங் முந்தைய நாள் பட்டாலாவில் இறந்து விட்டார். எனவே அவருக்குச் சொந்தமான சொத்துக் –களைக் கணக்கெடுங்கள் என்று கட்டளையிட்டார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கண்ட ஆன்மீகக் காட்சி உடனடியாக நிறைவேறியதைக் கண்டு பீம் ஸெய்ன் அதிசயித்துப் போனார்.

1878 ஆம் ஆண்டு ஆங்கிலம் தெரிந்த இளைஞர் ஒருவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைக் காண வந்தார். அவர் இருக்கின்ற பொழுதே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஆங்கிலத்தில் ஓர் இறையறிவிப்பைப் பெற்றார்கள். ‘இவர் எனது எதிரி’ என்பது அந்த இறை வெளிப்பாடாகும். அது அந்த இளைஞனைப் பற்றியே வந்த இறையறிவிப்பாகும். அதனை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவரிடம் கொடுத்தே மொழிபெயர்க்கச் சொன்னார்கள். உண்மையிலேயே அவர் இறைவனின் எதிரியாகவே இருந்தார்.

நீதிபதியாக இருந்த நவாப் சர்தார் முஹம்மது ஹயாத் கான் என்பவர் ஒருமுறை தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. மிர்ஸா குலாம் காதிர் தமது தம்பி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் அவருக்காகப் பிரார்த்தனை செய்யும்படிக் கேட்டுக் கொண்டார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவருக்காகப் பிரார்த்தனை செய்தார்கள். அதன் பயனாக அவர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கண்ட ஓர் ஆன்மீகக் காட்சியில் அவர் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுவார்; மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார் எனக் காட்டப்பட்டது.

இந்தச் செய்தி பல இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அறிவிக்கப்பட்டது. அதன்பின் சிறிது காலத்தில் அந்த நீதிபதி மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

ஒருமுறை 1882 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அவசரமாகக் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. இது அவர்களது சுற்று வட்டாரத்தில் வாழ்ந்த ஆர்ய வகுப்பினருக்கும் தெரியும். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது பணத் தேவையைப் போக்குவதன் மூலம் தமது பிரார்த்தனை ஒப்புக் கொள்ளப்படுவதற்கு ஆரியர்களும் சாட்சியாக இருக்கும் விதத்தில் தமது பணத்தேவையை நிறைவேற்றியருளுமாறு பிரார்த்தனை செய்தார்கள். அன்றைய தினமே அவர்கள் ஓர் இறையறிவிப்பைப் பெற்றார்கள். அதில் ‘இறைவன் அருகிலேயே இருக்கிறான்’ என்று காணப்பட்டது. அந்த இறையறிவிப்பின் இறுதி வாக்கியம் ஆங்கிலத்தில் அமைந்திருந்தது. அதில் இவ்வாறு காணப்பட்டது. “பிறகு நீர் அமிர்தசரஸுக்குச் செல்வீர்.” அதன் பின் பத்து நாட்கள் வரை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு எங்கிருந்தும் பணம் எதுவும் வரவில்லை. பதினோராவது நாள் ராவல்பிண்டியிலிருந்த நில ஆர்ஜித மேற்பார்வையாளரான முஹம்மது அஃப்ஸல் கான் அவர்களிடமிருந்து 110/– மணியார்டர் மூலம் வந்தது. அதைத் தொடர்ந்து மேலும் பணம் வரத் துவங்கியது. முதல் தவணைப் பணம் வந்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு வழக்கில் சாட்சி சொல்வதற்காக அமிர்தசரஸுக்குச் செல்ல வேண்டியதிருந்தது. இவ்வாறு இறைவனின் வார்த்தை முற்றிலுமாக நிறைவேறியது.

(தொடரும்...)

# அல்லாஹ்வின் இருப்பு மட்டுமே நம்மைக் காப்பாற்ற முடியும்!



ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:

நமது இறை வணக்கங்கள் கலப்பற்றதாகவும் செயல்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இன்றைய உலகின் சூழ்நிலையில் இருந்து, அழிவின் மிகவும் அபாயகரமான மேகங்கள் சூழ்ந்துள்ளன என்று தெரிய வருகிறது. ஏற்படவிருக்கின்ற அழிவு உலகத்தின் முடிவுக்கு வழிவகுக்கக் கூடியதாக இருக்கும். ஆக, தற்போது அஹ்மதிகளின் பணியாவது அவர்கள் துஆக்களைப் பயன்படுத்த வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நல்ல மக்களுக்காக அல்லாஹ் பிறரையும் காப்பாற்றி விடுகின்றான். நாம் மிகவும் அபாயகரமான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எவரும் காப்பாற்ற முடியும் என்றால், அது அல்லாஹ்வின் இருப்பு மட்டுமே ஆகும். உங்களையும் உங்களது சந்ததிகளையும் அவனுக்கு முன்னால் குனிபவர்களாக ஆக்குங்கள். அப்போது தான் நீங்களும் உங்களது சந்ததிகளும் பாதுகாப்பாக இருக்க முடியும். லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவின் உரிமையை நாம் நிலைநாட்டக் கூடியவர்களாக இருப்போம் என்றால், அல்லாஹ் நமது நல்ல செயல்களினால் உலகத்தையும் காப்பாற்றி விடுவான். உலகின் சூழ்நிலை எல்லையை மீறி சீர்குலைந்து விடுவதற்கு முன்னதாக அதிகம் அதிகமாக துஆ செய்யுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: குறித்த நேரத்திற்கு முன்பு செய்வதே நன்மையாகும். பிறகு செய்தால் எவ்வித பலனும் இருக்காது. கப்பல் மூழ்கும்போது அனைவரும் அழுகிறார்கள். ஆனால் கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கும்போது அழுது புலம்புவது எந்தப் பலனையும் தர முடியாது. அது அமைதியான சூழ்நிலையில் மட்டுமே பலன் தருவதாக இருக்கும். மனிதன் குறித்த நேரத்திற்கு முன்பு இடி விழுந்து விடுமோ என்று விழித்திருப்பது போன்று விழித்திருப்பதே இறைவனை அடைவதற்கான யுக்தி ஆகும். ஆனால் அவன் மீது இடி விழும்போது இடி விழுவதைப் பார்த்து கூச்சலிடுகின்றான். அவன் இடியின் அச்சத்தினாலேயே அன்றி, இறைவனுடைய அச்சத்தால் கூச்சலிடுவதில்லை.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: இன்று அஹ்மதிகளின் ஈமான் மற்றும் அல்லாஹ்வுடனான தொடர்பு மற்றும் துஆக்கள் மட்டும்தான் உலகை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். உலகவாசிகள் மீது அனுதாபத்தை உருவாக்கிக் கொண்டு உலகிற்காக துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ்வுக்கான கடமைகள் மற்றும் அடியார்களின் உரிமைகளின் பால் கவனம் செலுத்தவில்லை என்றால், இந்த உலகம் பாழடைந்ததாக மாறிவிடக் கூடும். ஆகவே ஒவ்வோர் அஹ்மதியும் இந்த சிந்தனையுடன் தங்களது கடமைகளை நிறைவேற்றுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பாருங்கள்! நீங்கள் சிறிது உழைத்து வயல்வெளியை ஆயத்தம் செய்யும்போது பலனுக்கான நம்பிக்கை ஏற்படுகின்றது. அதேபோன்று அமைதியான நாட்கள் உழைப்பிற்கானவை ஆகும். இப்போது இறைவனை நினைவு கூருவீர்கள் என்றால், பலனை அடைவீர்கள். தற்போது துஆக்கள் செய்தீர்கள் என்றால், அந்தக் கருணையாளனும் கண்ணியத்திற்குரியவனும் ஆகிய இறைவன் அருள் புரிவான். அல்லாஹ் இந்தத் துன்பத்தை அகற்றி தண்டனையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று தொழுகைகளில் ருகூவில், ஸஜ்தாக்களில் துஆக்களை செய்யுங்கள். துஆ செய்கின்றவர் ஒருபோதும் விலக்கப்படுவதில்லை. துஆ செய்கின்றவர் கொல்லப்படுவது என்பது சாத்தியமற்றதாகும். அவ்வாறாக இருந்தால், இறைவன் ஒருபோதும் கண்டறியப்பட மாட்டான். அவ்வாறே செய்தீர்கள் எனில், முழுமையான முறையில் உங்களிடம் உண்மையான கலப்பற்ற தன்மை உருவாகி விடும்.

இன்றும் அவ்வாறே அழிவின் அறிகுறிகள் தென்படுகின்றன. அதற்காக நாம் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் குனிய வேண்டும். ஏனென்றால் உலகை அழிவிலிருந்து பாதுகாப்பாக இருக்கச் செய்வதற்கு இதுவே வழியாகும்.

(ஜுமுஆ குத்பா – 14.10.2022)